# 50 நாட்களில்..

எஸ். ஜே. யோகராசா

வெளியீடு:

குடும்ப வாழ்வு

# முன்னுரை

1999. 03. 20

திருச்சபை பிதாவுக்கு அர்ப்பணித்த ஆண்டாக இவ்வருடத்தை ஒதுக்கியுள்ளது. பிதாவின் அன்பின் இலட்சணங்களை நாம் தியானிக்கத் தொடங்கியுள்ளோம்.

இறைவன் அன்பாக இருக்கிறார் என்பதை 'அன்பே கடவுள்' (1அருளப்பர் 4:8) எனவும், 'கடவுள் ஆவியானவர், ஆதலால் அவரைத் தொழுபவர்கள் ஆவியிலும் உண்மையிலும்தான் அவரைத்தொழுதல் வேண்டும்' (புனித அருளப்பர் 4:24) எனவும் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது.

இறை அனுபவத்துக்குவர தூய ஆவியானவர் எமக்குத் துணைபுரிகிறார். இந்நூலில் வரும் ஒவ்வொரு தலைப்பையும் ஒவ்வொரு நாளில் தியானித்து, அதன்படி வாழ ஆசைப்பட்டால் 50 நாட்களில் இறைவனின் அன்பின் அனுபவத்தைப் பெற முடியும்.

எமது ஆவி இறைவனது ஆவியோடு உறவாடத் துடிக்கிறது. ஆனால் உலகம், சரீரம், பசாசு அதற்குத் தடுக்கிறது. தூய ஆவியானவரின் உதவியோடு தாகத்தோடும், மன ஊக்கத்தோடும் இறைவனைக் காண வேண்டும் என்ற ஆசையில் செபித்து வந்தால் இறைவன் எம்வாழ்வில் தம்மை வெளிப்படுத்துவார்.

அவர் எமது வாழ்வில் தம்மை வெளிப்படுத்தினால் நிட்சயமாக எமது வாழ்வு மாறுகிறது. இறைவன் எமக்குச் செய்த அற்புதங்களை, அவரை அனுபவித்த அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வோம்.

உங்களுக்கு ஆலோசனைகள் தேவைப்பட்டால் கீழ்வரும் முகவரிக்கு எழுதுங்கள். முடிந்தவரை உதவக் காத்திருக்கிறோம். இந்நூலை வெளியிட உதவிய சகலரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. மேலும் அழகாக கணனியில் பொறித்த **A.N.F** அவர்களுக்கும் அழகாக அச்சிட்டு உதவிய திரு. சிதம்பரம் அவர்கட்கும் நன்றி.

நன்றி.

**S. J. Yogarajah.**
**65/322, Crow Island**
**Mattakkuliya**
**colomo - 15.**
**Sri Lanka**
**01500**

எஸ். ஜே. யோகராசா
65/322, காக்கை தீவு
மட்டக்குளி
கொழும்பு – 15.
இலங்கை
01500

# 1. இறைவன் எனது தந்தை

எமது வீட்டில் பல நாட்களாகத் தண்ணீர் குழாயில் தண்ணீர் வரவில்லை. நாம் அறிவிக்க வேண்டியவர்களுக்கெல்லாம் அறிவித்தோம். அதைத் திருத்த வரவில்லை. தண்ணீரில்லாமல் சொல்லமுடியாத பல கஷ்டங்களை அனுபவித்தோம். மனித மட்டத்தில் பெரியவர்களுக்கெல்லாம் அறிவித்தோம் தானே வருவார்கள் என்று எதிர்பார்த்துத் தோல்விகண்டோம். காலையில் எமது செபத்தில் நாம் குடும்பமாகச் செபிக்கும் வேளையில் உருக்கமாக எமது தந்தையாம் இறைவனிடம் கூறினோம்.

**'அப்பா தந்தையே, இந்த உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் நீரே தந்தையாக இருக்கிறீர். எமக்கு அத்தியாவாசியமான தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உம்மாலே முடியும். எமக்கு நீரே தந்தை. மனித மட்டத்தில் கூறுபவர்களுக்கொல்லாம் கூறிவிட்டோம். நீரே இப்பிரச்சினையைப் பாரமெடும்'** என்று செபித்தோம்.

அன்று பகல் ஓர் ஆச்சரியம் எமக்குக் காத்திருந்தது. அன்று தண்ணீர்க் குழாய்களைத் திருத்துவதற்கு ஆட்கள் வந்திருந்தார்கள். அவற்றைத் திருத்தினார்கள். தண்ணீர் வரத் தொடங்கியது.

எமது வாழ்வில் தூய ஆவியானவர் இறைவனை அப்பா என்று கூப்பிட உரிமையைத்தருகிறார்.

**'நீங்கள் இறை மக்களாய் இருப்பதால் கடவுள் தம்மகனின் ஆவியை நம் உள்ளங்களுக்குள் அனுப்பினார்: அந்த ஆவியானவர் 'அப்பா தந்தாய்' எனக் கூப்பிடுகிறார். ஆகவே, இனி நீ அடிமையல்ல, மகன்தான்: மகனாயின் உரிமையாளனுமாம். இவையாவும் கடவுளின் செயலே'**

(கலாத்3:6-7) (உரோமர் 8:14-17)

இறைவன் எமது தந்தை என்ற உரிமையோடு கூப்பிடவும், எமது தேவைகளை உரிமையோடு கேட்கவும் தூய ஆவியானவர் எமக்கு விசுவாசக் கொடையைத் தருகிறார். நாம் விசுவாசக்கொடையைப் பயிற்சி செய்கிறோமா? தூய ஆவியானவர் எம்மில் செயற்பட இடங்கொடுக்கிறோமா?

***செபம்:***

அன்பான பிதாவே! உம்மை அப்பா என்று அழைக்கவும், உரிமையோடு எமது வேதனைகள், தேவைகளை உம்மிடம் கூறவும் எனக்கு விசுவாசக்கொடையைத் தாரும். அந்த விசுவாசக் கொடையைச் சிறு நிகழ்ச்சிகளிலும் பயிற்சி செய்ய ஆவலைத்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 2. ஒளியாய் இருக்கிறீர்கள்

எனக்குத் துன்பங்கள் பல செய்த ஒரு குடும்பத்தினரைப்பற்றிய செய்தி ஒன்றைக் கேள்விப்பட்டேன். அவர்களது தோல்வியான நிகழ்ச்சியைக் கேட்டதும் என்னை அறியாமலே எனது மனம் சந்தோசமடைந்தது. ஆனால் அன்று குடும்பமாகக் காலையில் செபித்தோம். இறைவன் எனது தவறைச் சுட்டிக்காட்டினார். எமக்கு வேண்டியவர்கள், எம்மை அன்பு செய்பவர்களுக்கு ஏதாவது தோல்வியான, குறைவான சம்பவங்கள் ஏற்படும்போது அதை மறைக்க, அவர்களைக் காப்பாற்ற முயலுகிறோம். ஆனால், எமக்குப் பிடிக்காத, எமக்குத் துன்பம் செய்தவர்களுக்கு நடந்த ஏதாவது தோல்வியான சம்பவங்களை அறிந்ததும் சந்தோசப்படுகிறோம். அதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த ஆசைப்படுகிறோம்.

ஆனால் தூய ஆவி எம்மை வழிநடத்தும்போது அவரது வழிநடத்துதலுக்கு இடங்கொடுத்தால் ஒளியின்மக்களாக இருப்போம். இறைவன் நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் மழைபெய்யச்செய்கிறார்.

**'ஒருகாலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்பொழுது ஆண்டவருக்குள் ஒளியாய் இருக்கிறீர்கள். ஒளியின் மக்களாக நடந்து கொள்ளுங்கள். ஒளியின் கனிகளோ நன்மை, நீதி, உண்மை ஆண்டவருக்கு உகந்தது எது என்று உய்த்துணருங்கள். இருளின் பயனற்ற செயல்களைச் செய்பவர்களோடு சேர வேண்டாம், அவை தவறெனக் காட்டுங்கள்'**

(எபேசி 5:8-12)

இறைவன் எனது தந்தையாக இருந்தால், ஏனைய மக்கள் எனது சகோதரர்களே. எல்லா இன மக்களும் எனது சகோதரர்களே. இறைவன் எப்படி இரக்கமுள்ளவராக இருக்கிறாரோ அப்படியே எனது வாழ்விலும் இரக்கமுள்ள ஒருவனாக, ஒருத்தியாக இருக்க எமக்குத் தூய ஆவியின் உதவி தேவை. அவர் தரும் வல்லமை தேவை.

*செபம்:*

அன்பான பிதாவே! உமது மகனாக, மகளாக வாழ இருள் என்னைத் தடுக்கிறது. எனது மனம் இருளாக இருக்கும்போது எல்லாமே இருளாக இருக்கிறது. தூய ஆவியின் உதவியோடு ஒளியாக எனது மனம் இருக்கும்போது எல்லாம் ஒளியாகத் தெரிகிறது. என்னை ஒளியின் பிள்ளையாக மாற்றும். உமது அன்பை அனுபவித்து அதை வெளிப்படுத்த வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 3. அன்பு

அன்பு என்றதும் அதைப்புரியாதோர் அதிகம். ஆனால் அன்பு எல்லோருக்கும் தேவைப்படுகிறது. அன்பு என்பது உணர்வு அல்ல. உணர்வு மாறக்கூடியது. ஆனால் அன்பு மாறுவதில்லை.

ஒரு இளைஞனுக்கும் ஒரு இளம் பெண்மீது கவர்ச்சி ஏற்படுகிறது. இது உணர்வு கலந்த நிலை. இது மாறக்கூடியது. அவர்கள் இருவரும் கருத்தைப் பரிமாறுகிறார்கள். இது வளர்ந்தால் மற்றவர் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதை அறிய ஆவலாயிருப்பர். அதைக்குதூகலம் என்போம். இதுவும் உணர்வுகலந்த நிலையே. இதுவும் மாறக்கூடும். இதையும் தாண்டினால் ஒருவரை ஒருவர் தொட்டுப்பார்க்க ஆசைப்படுவர். இதுவும் உணர்வு கலந்த நிலையே. இதுவும் அன்பல்ல. இதையும் கடந்து சென்றால் ஒருவருக்காக மற்றவர் தியாகம் செய்ய, கஷ்டப்பட ஆசைப்படுவர். இதுவும் அன்பல்ல. இதுவும் உணர்வுகலந்த நிலையே. இதையும் தாண்டிய நிலையே அன்பாகும். அன்பு என்பது தீர்மானமாகும். அர்ப்பணமாகும். உணர்வு கலந்த நிலையில்லை. இது மாறாதது. மற்றவர் நல்ல உணர்வைத்தரும் போது நானும் அன்பு செய்கிறேன். மற்றவர் எனக்கு விருப்பமில்லாத விதத்தில் செயற்படும்போது அன்பு செய்ய முடிய வில்லை என்கிறோம். இதுதவறு. மற்றவர் எப்படிப்பட்ட பிரதிச்செயலைச் செய்தாலும் நான் அவருடைய நன்மைக்காகச் செயற்படப்போகிறேன் என்ற தீர்மானமாகும்.

கிறிஸ்துநாதர் இறைவனுடைய மாறாத அன்பைச் சிலுவையில் அனுபவித்தார். அந்த அன்பால் மக்களை அன்பு செய்தார். மன்னித்தார். **“தந்தையே இவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று இவர்களுக்குத் தெரியவில்லை”** (புனித லூக்கா 23:34)

**“தேவ ஆவி விளைவிக்கும் பலன்களாவன: அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம்”**

(கலாத்தியர் 5:22)

**“அன்பு பொறுமையுள்ளது. பரிவுள்ளது. அன்பு அழுக்காறு கொள்ளாது, பெருமை பேசாது, இறுமாப்பு அடையாது, இழிவானதைச் செய்யாது, தன்னலத்தைத் தேடாது, சீற்றத்திற்கு இடந்தராது, வர்மம் வைக்காது, அநீதியைக் கண்டு மகிழ்வுறாது, பிறர் மீது நல்லெண்ணம் இழப்பதில்லை, நம்பிக்கையில் தளர்வதில்லை, அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அன்புக்கு என்றும் முடிவு இராது”** (1கொரிந் 13:4-8)

**“முடிவில்லாத அன்பினால் உன்மேல் அன்பு வைத்தோம். ஆதலால் உனக்குத் தொடர்ந்து அன்பு செய்கிறோம்”** (எரேமி 31:3)

***செபம்:***

அன்பான பிதாவே! உமது ஆவியின் கனிகளில் ஒன்றாகிய அன்பை அனுபவிக்க வரந்தாரும். உமது அன்பை அனுபவித்து அந்த அன்பால் என்னையும், மற்றவர்களையும் அன்பு செய்ய வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென.

# 4. மகிழ்ச்சி

மனித அன்பை அனுபவிக்கும்பொழுது எமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஆனால் மனிதர் எம்மைப் புறக்கணிக்கும்போது, பிழையாக விளங்கும்போது, அன்பு செய்யாமல் இருக்கும்போது தாங்க முடியாத வேதனை, துன்பம் ஏற்படுகிறது. சிலர் தற்கொலை செய்து உயிரை மாய்த்தால் நல்லது என எண்ணுவர்.

மனித உறவு உடையும்போது மனிதன் வேதனைப்படுகிறான். ஆனால் மனித உறவு கள் வெற்றிகரமாக, நன்றாக இருக்கும்போது மகிழ்ச்சி அடைகிறான்.

மனித அன்பு கட்டுப்பாடுள்ளது. ஓரளவுக்குமேல் அன்பு செய்ய மனிதனால் முடியாது. மனித அன்பு மாறக்கூடியது. சுயநலமுள்ளது.

கணவன் மனைவிக்கிடையில் பிரச்சினை ஏற்பட்டதும் ஒருவர் மற்றவரைப் பழிவாங்குகிறார்கள். சிலர் மௌனம் சாதிப்பர். சிலர் தன்னைப் பழிவாங்குவர். உணவு உண்பதில்லை. சில ஆண்கள் போதைபாவிப்பர். சில தாய்மார் கணவனுடன் உறவு முறிந்ததும் பிள்ளைகளில் அளவுக்கு அதிகமாகத் தனது அன்பைக் காட்டி தன்னில் தங்கவைப்பர்.

ஆகவே மனித அன்பு மனிதனுக்குத் தேவைதான். ஆனால் மனித அன்பு கட்டுப்பாடுள்ளது. மாறக்கூடியது. ஆனால் இறைவனது அன்பு கட்டுப்பாடில்லாதது. நிபந்தனையற்றது. முடிவில்லாதது. மாறாதது. இறைவன் எம்மைத் தீர்ப்பிடவல்ல மீட்கவே ஆவலுடன் இருக்கிறார் என்பதைக் கிறிஸ்து தமது வாழ்வில் எடுத்துக் காட்டினார். இறைவனது அன்பு எம்மை அடிமைப்படுத்தாது. தன்னில் தங்கவைக்காது. எம்மை விடுதலையாக்குகிறது. அவரது அன்பை எந்நேரமும் அனுபவிக்கலாம். நிகழ்ச்சிகள் அதற்குத்தடையாக இருக்கக்கூடாது. மற்றவர்கள் எம்மை வெறுத்தாலும், புறக்கணித்தாலும், பிழையாக விளங்கினாலும் இறைவனது அன்பை அனுபவிக்கலாம். அதற்கு விசுவாசம் தேவை. நாம் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் இறைவன் என்னை அன்பு செய்கிறர். ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் இதை ஞாபகப்படுத்த வேண்டும்.

- அ) இது இறைவனுக்குத் தெரியும்
- ஆ) இதற்கு இறைவன் இடமளித்துள்ளார்
- இ) இதை நன்மையாக மாற்றுவார் (ரோமர் 8:28)
- ஈ) அவரது நேரம் வரும்வரை காத்திருப்பேன். (நன்மையைக் காணும் வரை)
- உ) அது வரை இறைவனுக்கு நன்றி கூறி புகழ்வேன்.

**"அவர் தம் முன்னே வைத்திருந்த மகிழ்ச்சியின் பொருட்டு நிந்தையைப் பொருட்படுத்தாமல் சிலுவையைத் தாங்கினார்"** (எபிரே 12:2) சிலுவையைத் தாங்கும் பொழுதும் அவர் நித்திய மகிழ்ச்சியை மனதில் கொண்டிருந்தார். அந்த மகிழ்ச்சியை நாமும் பெற ஆசைப்படவேண்டும். அந்த மகிழ்ச்சியை மனதில் வைத்து நாமும் எமது வேதனை துன்பத்திலும் இறை அன்பை அனுபவிப்போம்.

**"ஆண்டவருக்குள் என்றும் அகமகிழுங்கள், மீண்டும் கூறுகிறேன், அகமகிழுங்கள்"** (பிலிப்பி 4:4)

*செபம்:*

அன்பான பிதாவே, நான் அன்புக்காக ஏங்குகிறேன். மனித அன்பு மாறுகின்றது. மனித அன்பு கட்டுப்பாடுள்ளது. மனித அன்பு சுயநலமுள்ளது. மனித அன்பு தன்னில் தங்கச்செய்கிறது. இந்த அன்பை அனுபவிக்கும்போது மேலும் நோயாளியாகிறேன். மனித அன்பை எதிர்பார்க்காமல் மற்றவர்களை அன்புசெய்ய வரந்தாரும். மாறாத உமது அன்பை அனுபவிக்க வரந்தாரும். அதன்மூலம் உண்மையான மகிழ்ச்சியை அனுபவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 5. அமைதி

போரோ துன்பமோ இல்லாத நிலையை மட்டும் குறிக்காது. அச்சம், கவலை முதலியன இல்லாத வாழ்வையும், பாதுகாப்பு நிறைந்த வழமான வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் "Shalom" "ஷலோம்" என்னும் எபிரேயச் சொல் குறிக்கும்

இன்று எமக்கு அமைதி தேவை. மனதுக்கு அமைதி, நிம்மதி தேவை. வீட்டில், நாட்டில் அமைதி தேவை. ஆனால் இந்த அமைதி எமக்குக் கிடைக்கிறதா? எங்கும் அமைதி குலைந்த நிலையே தெரிகின்றது.

**"தன் ஊனியல்பில் விதைப்பவன் அந்த இயல்பிலிருந்து அழிவையே அறுப்பான். ஆவியானவரைப் பெற்ற இயல்பில் விதைப்பவன், ஆவியானவர் தரும் முடிவில்லா வாழ்வை அறுப்பான்"** (கலாத்தி 6:8)

முடிவில்லா வாழ்வு அமைதியைத் தருகிறது. அந்த வாழ்வு இறைவனுக்குள்தான் உள்ளது. ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு அகப்பட்டவன் விடுதலை பெறுகிறான். அன்பு செய்ய சுதந்திரம் கிடைக்கிறது. அங்கு அமைதி நிலவுகிறது. இல்லையேல் ஊனியல்பின் செயல்களான **"கெட்டநடத்தை, அசுத்தம், காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சினம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம்"** (கலாத்தியர் 5:19-21) போன்றவற்றின் மூலம் அழிவு ஏற்படுகின்றது.

கிறிஸ்துநாதர் சிலுவையில் பலவிதமான துன்பங்களைப் பட்டாலும் உள்ளாழ அமைதியை அனுபவித்தார். காரணம் பிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன் என்று அமைதியடைந்தார். எதிலும் இறைவனது விருப்பப்படி வாழும்பொழுது மன அமைதி பிறக்கிறது. சூழல் பயங்கரமாக இருந்தாலும் உள்ளத்தில் அமைதி பிறக்கிறது. இறைவனது அன்பை விசுவசிக்கும்பொழுதே அமைதி பிறக்கிறது.

கிறிஸ்து உயிர்த்து சீடர்களுக்குக் காட்சி கொடுத்தபோது **"உங்களுக்குச் சமாதானம்"** (புனித அருள 20:19) என்றார்.

இன்று இந்த சமாதானம், அமைதி எம்மில் உள்ளதா? குடும்பத்தில் உள்ளதா? முக்கியகாரணம் அன்பு இல்லாமையே. இறைவனை அன்பு செய்ய வேண்டும். தன்னை அன்பு செய்ய வேண்டும். மற்றவர்களை அதேபோன்று அன்பு செய்ய வேண்டும். அப்பொழுது தான் உண்மையான அமைதி உள்ளத்தில் பிறக்கும். **"அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும், மனதுக்கும் அரணாயிருக்கும்"** (பிலிப்பி 4:7)

சூழலில் எவ்வளவு தான் பிரச்சினை இருந்தாலும் இறை அன்பை அனுபவிப்பவனிடத்தில் உண்மையான அமைதி நிலவும்.

*செபம்:*

அன்பான பிதாவே! தூய ஆவியின் கனிகளில் ஒன்றாக அமைதியை அனுபவிக்க வரந்தாரும். உமது அன்பை அனுபவிக்கும்பொழுதுதான் உண்மையான அமைதி பிறக்கிறது. எல்லா சந்தர்ப்பங்களிலும் உமது அன்பை அனுபவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 6. பொறுமை

இன்று எமக்குப் பொறுமை தேவை. இதுவும் தூய ஆவியின் கனிகளில் ஒன்று. திடீர் கோபத்துக்கு ஆளாகாமல் பாவிகளின் மனமாற்றத்துக்காக இப்பொறுமை எமக்குத் தேவைப்படுகிறது. இறைவன் எம்மைப் பொறுத்துக் கொள்கிறார்.

**"அவரது அளவற்ற பரிவையும், சகிப்பையும், பொறுமையையும் புறக்கணிக்கிறாயா? கடவுள் பரிவு காட்டுவது உன்னை மனந்திரும்பத் தூண்டுவதற்கோ என்பதை அறியாயோ? உன் முரட்டுத்தனம் உன்னை மனந்திருப்ப விடவில்லை"**
(உரோமர் 2:4)

இறைவனின் இரக்கத்தைப் பின்பற்றி நாமும் ஒருவரை ஒருவர் பொறுத்துக் கொள்ளவேண்டும். இறைவன் எமது பெலவீனங்களில் எம்மைப் பொறுத்துக் கொள்கிறார். அவரை அனுபவித்தால் நாமும் மற்றவர்களைப் பொறுத்துக்கொள்ள வல்லமை தருகிறார்.

**"கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டு அவரால் அன்பு செய்யப்பட்ட இறைமக்கள் நீங்கள். இரங்கும் உள்ளம், பரிவு, மகிழ்ச்சி, சாந்தம், பொறுமை, ஆகிய பண்புகளை அணிந்து கொள்ளுங்கள். ஒருவர் மீது ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னித்து விடுங்கள். ஆண்டவர் உங்களை மன்னித்ததுபோல் நீங்களும் மன்னியுங்கள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அன்பை அணிந்து கொள்ளுங்கள். அதுவே எல்லா நற்பண்புகளையும் பிணைத்து நிறைவு அளிப்பது. கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இதயங்களில் ஆட்சி புரிவதாக"** (கொலோசி 3:12-15)

இறைவனுடைய அன்பை அனுபவிக்கும்பொழுது அவர் தரும் மகிழ்ச்சியை அனுபவிப்போம். அந்த மகிழ்ச்சி எமது மனதில் அமைதியைத் தோற்றுவிக்கிறது. அந்த அமைதி மற்றவர்களைப் பொறுத்துக்கொள்ள எம்மைத்தூண்டுகிறது. அதுமட்டுமல்ல மற்றவர்களைப் பழிவாங்காமல் நாம் துன்புற வைக்கிறது. வாழ்வில் ஏற்படும் வேதனை சோதனைகளைத் தாங்கிக் கொள்ள வல்லமை தருகிறது.

**"வேதனைகள், நெருக்கடி, இடுக்கண், சாட்டையடிகள், சிறைவாழ்வு, குழப்பங்கள், அயரா உழைப்பு, கண்விழிப்பு, பட்டினி இவற்றையெல்லாம் மிகுந்த மனஉறுதியோடு ஏற்றுக்கொண்டு, புனிதம், அறிவு, பொறுமை, பரிவு, பரிசுத்தம் ஆவிக்குரிய செயல்கள், களங்கமில்லா அன்பு இவற்றைக் கடைப்பிடித்து, உண்மைபேசி, கடவுளின் வல்லமையைப் பெற்றுக்கொண்டு இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வைச் சார்ந்த படைக்கலங்களை வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் தாங்கி மேன்மையிலும் இழிவிலும், தூற்றப்படினும் போற்றப்படினும் அனைத்திலும் நாங்கள் பணியாளரென்றே நடைத்தையில் காட்டுகிறோம். எங்களை வஞ்சகர் என்கிறார்கள், நாங்களோ உண்மையுள்ளவர்கள்...."** (2கொரிந் 6:4-10)

எமது வாழ்வில் பொறுமையோடு வாழ எமக்கு வல்லமை தேவை. சமுதாயத்தில் அநியாயம் நடக்கும்போது பொறுத்துக்கொண்டு வாயை மூடிக்கொண்டு இருப்பதையா இறைவன் விரும்புகிறார்? இல்லை பிழையை அன்போடு சுட்டிக் காட்டவும் இறைவன் எம்மை அழைக்கிறார்.

***செபம்:***

அன்பான பிதாவே! உமது வல்லமையால், மற்றவர்களது பெலவீனங்களைப் பொறுத்துக்கொண்டு அன்பு செய்ய வரந்தாரும். அன்புடன் தவறுகளைச் சுட்டிக்காட்ட வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 7. பரிவு

அன்பின் மறுவடிவமே பரிவு ஆகும். பேரிரக்கமுள்ள இறைவன் பாவிகள் மீது காட்டும் அன்பை பரிவு என்கிறோம்.

**"நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பை எண்பிக்கிறார்"** (உரோ5:8)

இறைவனுடைய ஆவியால் மனிதனுடைய இதயங்களில் பொழியப்பட்டுள்ள இறையன்பு பரிவு மூலம் வெளிப்படவேண்டும். (2கொரிந் 6:6, கொலோ 3:12)

மனித அன்புக்காகச் சிறுவரில் இருந்து முதியவர்வரை எந்நேரமும் ஏங்கித்துடிக்கிறோம். அது முழுமையாகக் கிடைப்பதில்லை. எம்மை யாரும் முழுமையாகப் புரிந்து கொள்வதில்லை. இறைவன் முழுமையாக என்னைப் புரிந்து வைத்துள்ளார். அவரை அனுபவித்தால் மற்றவர்களைப் புரிந்து கொண்டு பரிவு காட்ட எம்மால் முடிகிறது.

மற்றவர்களைப். புரிந்துகொள்ள ஆசைப்படவேண்டும். மற்றவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல. ஒவ்வொரு செயலுக்கும் பின்னணியுண்டு. அதை அறியவேண்டும். ஒருநாள் நான் பிரசங்கம் செய்யும்பொழுது மக்கள் கூட்டத்தில் ஒருவர் என்னைப் பார்த்துக் கொண்டிருக்காது வேறுபக்கமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பிரசங்கம் முடிந்து அவருக்குக் கிட்டே சென்று அவருடன்கதைத்தேன். அப்பொழுது-தான் அவருக்கு இதுகண்களும் தெரியாது என்ற உண்மையை அறிந்து கொண்டேன்.

பார்த்தீர்களா, நாமும் வீட்டில், சமுதாயத்தில் மற்றவர்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்குப் பரிவு காட்ட முன்வர வேண்டும். ஒவ்வொரு-வரது செயலுக்கும் காரணமுண்டு. அவர் ஏன் அப்படிச் சொன்னார், செய்தார். என்று அறிய வேண்டும். அதுமட்டுமல்ல மற்றவருடன் மனத்தாங்கல் இருந்தால் அதைத் தெரியப்படுத்தி மனம் விட்டுப் பேச-வேண்டும். ஒருவருக்கொருவர் மன்னிப்புக் கேட்டு மன்னிப்புப் பெறவேண்டும். அதற்கு இறைவனது வல்லமை தேவை.

*செபம்:*

அன்பான பிதாவே! உமது அன்பு எனக்குத்தேவை. உமது பரிவை நான் அனுபவித்து மற்றவர்களுக்குப் பரிவுகாட்ட வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 8. நன்னயம்

இது பரிவோடு தொடர்புடைய சொல்லாகும்.

**"நீங்கள் நன்னயம் நிறைந்தவர்களாயும், எல்லா அறிவும் நிரம்பப்பெற்றவர்களாகவும், ஒருவர்க்கு ஒருவர் அறிவு புகட்டக் கூடியவர்களாகவும் இருக்கிறீர்கள்..."** (உரோ 15:14)

நன்னயம் என்பதற்குப் பல பொருள் உண்டு. நன்மை, நற்குணம், அன்புடைமை, தாராள குணம், ஒழுக்கமேன்மை என்று பல பொருள் கொள்ளலாம். இறைவனுடைய அன்பை அனுபவிப்பவர்கள் இயற்கையாகவே நன்மை செய்வதில் நிலைத்திருப்பார்.

**"கடவுளின் திருவுளப்படி துன்பத்துக்கு ஆளாகிறவர்களும், நன்மை செய்வதில் நிலைத்திருந்து படைத்தவரிடம் தம் ஆன்மாக்களை ஒப்படைப்பார்களாக"** (1இராய 4:19)

இன்று நல்ல செயல்களைச் செய்வோர் குறைந்து வருகின்றனர். எங்கும் போட்டி, எதிலும் போட்டி. பிள்ளை பிறந்தால் அதைக் கொண்டாடும்போதும் போட்டி போடுகின்றனர். பிள்ளை இறந்தால் அதையும் போட்டியுடன் ஆடம்பரமாகச் செலவு செய்கின்றனர்.

இன்று எளிமையாகவும், அழகாகவும் உடுப்பது குறைந்து வருகின்றது. இரவு நடனமாடும். களியாட்டங்களுக்கு உடுக்கும் உடுப்பையே ஆலயத்துக்கும் அணிந்து வருகின்றனர். உற்பத்தியாளர் தமது பொருட்களை விற்க கலப்படம் செய்து பொய் சொல்லி, ஏமாற்றி அதிக இலாபத்துக்கு விற்கின்றனர்.

பணத்தை முன்கொண்டே மனித உறவுகளும் ஏற்படுகின்றன. பணத்தை வைத்தே மற்றவரை மதிப்பிடுகின்றனர். குணத்தை வைத்தல்ல. அதனால் குறுக்குவழியிலாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்று அலைகிறார்கள்.

அரசியல் களம் பொய்யும், களவும் நிறைந்து வருகின்றது. ஆட்சி செய்பவர்களிடம் உண்மை, நீதி, நேர்மை குறைந்து வருகிறது.

குடும்பங்களில் ஒற்றுமையில்லை. பழிவாங்கும் படலம் மலிந்து காணப்படுகிறது. மற்றவர்கள் பார்க்கவேண்டும். எம்மை மதிக்கவேண்டும். என்பதற்காக ஆடம்பரமாக வாழ முயலுகிறார்கள்.

*செபம்:*

**அன்பான பிதாவே, எனது வாழ்வை மாற்றியருளும். உமது ஆவியின் வல்லமையினால் நல்ல செயல்களைச் செய்ய வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.**

# 9. விசுவாசம்.

இறைவன் மீது மனிதன் கொள்ளும் விசுவாசத்தை (Faith) மட்டுமன்று, பற்றுறுதி (Faithfulness) பிரமாணிக்கம் வாய்மை தவறாமை, நம்பிக்கைக் குரிய தன்மை போன்ற எல்லாப்பண்புகளையும் குறிக்கும்.

**"விசுவாசம் என்பது நம்பிக்கையோடு எதிர்பார்ப்பவை கிடைக்கும் என்னும் நிலையான உறுதி கண்களுக்குப் புலப்படாதவை பற்றி மனந்தளராத நிலை"** (எபிரே 11:1-2) என்று சின்னப்பர் இங்கு கூறுகிறார்.

நாம் இறைவனில் எதை நம்புகிறோம். விசுவசிக்கிறோம். நாம் கேட்பவை கிடைக்கும் என்பதையா? அல்லது அவர் தந்த வாக்குறுதிகளையா?

**"முடிவில்லாத அன்பினால் உன்மீது அன்பு வைத்தோம். ஆதலால் உனக்குத் தொடர்ந்து அன்பு செய்கிறோம்"** (எரேமி 31:3)

இறைவன் நிபந்தனையில்லாது என்னை அன்பு செய்கிறார். இதை என்னால் விசுவசிக்க முடியுமா? இறைவன் அன்பாக இருந்தால் எனக்கு ஏன் இப்படி நடக்கிறது? என்ற கேள்விகள் எழுகின்றன.

குழந்தை தனது தாய் தன்னை அன்பு செய்கிறாள் என்பதை எப்படி உணர்கிறது. அவளது செயல்மூலம். தனது தேவைகளை அவள் நிறைவேற்றுகிறாள். தனக்குப் பாதுகாப்புத் தருகிறாள். தான் தவறு செய்யும்போது தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்கிறாள். அவளது அரவணைப்பு இவைகள்மூலம் குழந்தை தாயின் அன்பை அனுபவிக்கிறது.

நாமும் இறைவனது அன்பை அனுபவிக்க வேண்டும். கடவுள் இருக்கிறார் என்பதை மட்டும் விசுவசிப்பது விசுவாசம் அல்ல.

**"கடவுள் ஒருவரே என்று நீ விசுவசிக்கிறாய். நல்லது தான் பேய்கள் கூட அதை விசுவசிக்கின்றன, விசுவசித்து நடுங்குகின்றன. அறிவிலியே, செயலற்ற விசுவாசம் பயனற்றதென நீ அறிய வேண்டாமா? நம் தந்தையாகிய ஆபிரகாமைப் பார் தம் மகன் ஈசாக்கைப் பீடத்தின்மேல் பலிகொடுத்தபோது செயல்களால் அன்றோ இறைவனுக்கு ஏற்புடையவரானார். விசுவாசமும் செயல்களும் ஒருங்கே செயலாற்றின என்பதும், செயல்களால் விசுவாசம் நிறைவுபெற்றது என்பதும் இதிலிருந்து புலப்படுகிறதன்றோ. இவ்வாறு ஆபிரகாம் கடவுளை விசுவசித்தார், அதனால் கடவுள் அவரைத் தமக்கு ஏற்புடையவர் என மதித்தார் என்ற மறைநூல் வாக்கு நிறைவேறியது. மேலும் அவர் கடவுளின் நண்பன் எனவும் அழைக்கப்பெற்றார். ஆகவே, மனிதன் விசுவாசத்தினால் மட்டுமன்று, செயல்களாலும் இறைவனுக்கு ஏற்புடையவனாகிறான் என்று தெரிகிறது"** (யாகப்பர் 2:19-25)

*செபம்:*

அன்பான பிதாவே! நீர் என்னை அன்பு செய்கிறீர் என்பதை விசுவசிக்க வரந்தாரும். நிகழ்ச்சிகளில் விசுவசிக்கமுடியாது தடுமாறுகிறேன். மற்றவர்கள் என்னைப் புறக்கணிக்கும்போது என்னைப் பிழையாக விளங்கும்போது, தோல்விகள் ஏற்படும்போது உமது அன்பை அனுபவிக்கமுடியாமல் தடுமாறுகிறேன். எனது விசுவாசத்தைப் பலப்படுத்தும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 10. சாந்தம்

அகந்தை, கோபத்துக்கு மாறான சுபாவமே சாந்தம் ஆகும்.

**"நான் பிரம்போடு வரவேண்டுமா, அன்போடும் சாந்த உள்ளத்தோடும் வர வேண்டுமா? என்ன வேண்டும்?"** (1கொரிந் 4:21)

**"கிறிஸ்துவிடம் விளங்கிய சாந்தத்தின் பெயராலும், பரிவுள்ளத்தின் பெயராலும் சின்னப்பனாகிய நானே உங்களைக் கேட்டுக் கொள்வதாவது: நான் உங்களை நேரில் காணும்போது தாழ்ந்துபோகிறேன்"** (2கொரிந் 10:1) என்று சின்னப்பர் கூறுகிறார்.

தவறிய சகோதரனைத் திருத்த சாந்தமான உள்ளம் தேவை என்கிறார் சின்னப்பர். **"தன்னை எதிர்ப்பவர்களைச் சாந்தத்தோடு கடிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் கடவுள் அவர்களுக்கு மனந்திரும்பும் அருளைத் தந்து அவர்கள் உண்மையைக் காணச் செய்யக்கூடும்"** (2தீமோ 2:25)

**"அவர்கள் எந்த நற்செயலுக்கும் தயாராயிருக்கவும், பழிச்சொல்லும் வீண்சண்டையும் விலக்கி, அமைதியுடன் எல்லோரிடமும் நிறைவான சாந்தத்தோடு பழக வேண்டும்"** (தீத்து 3:2)

சாந்தம் என்பதற்கு அமைதி, பொறுமை என்ற பல பொருள் உண்டு. இங்கு சின்னப்பர் இப்பொருளிலேயே கூறுகிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவின் சாந்த குணத்தைப் பிரதிபலிக்க வேண்டும்.

**"நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும்"** (புனித. மத்தே 5:5)

மேற்கூறப்பட்ட வாசகங்களை நோக்கும்போது சாந்த குணத்தின் முக்கியத்துவம் புரிகிறது. ஆனால் நாம் வாழும் சூழலினால் எம்மிடமுள்ள சாந்த குணம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மற்றவர்களது நடத்தை, நாட்டு நிகழ்ச்சிகள் போன்றபலவற்றிலும் எமது சாந்த குணம் பழுதடைகின்றது. ஆனால் இக்குணத்தை வளர்க்க தூய ஆவியின் வல்லமை தேவை.

தூய ஆவியின் வல்லமையோடு சாந்த குணத்தை என்னில் வளர்க்க இன்று ஆசைப்படவேண்டும். எனது செயல்கள் சாந்தத்தோடு இருக்கட்டும். தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது சாந்தத்தோடு சுட்டிக் காட்டப்பழகுவோம்.

***செபம்:***

அன்பான பிதாவே! எனக்குச் சாந்த குணம் தேவை. என்னில் அதுவளர எனக்கு உதவியருளும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 11. தன்னடக்கம்

தன்னை அடக்கியாளும் திறமை தன்னடக்கமாகும். பாலுறவு இச்சைகளை (Sexual desires) மட்டும் இது உணர்த்தவில்லை. (1கொரிந் 7:9) ஆனால் ஊனியல்பின் செயல்களை அடக்கியாளும் தன்மையே தன்னடக்கமாகும். **"ஊனில்பின் செயல்கள் யாவருக்கும் தெரிந்தவையே. அவைபின்வருமாறு. கெட்ட நடத்தை, அசுத்தம், காமவெறி, சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சினம், கட்சிமனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை"** (கலாத்தி 5:19-21)

இவை அனைத்தையும் அடக்கியாளும் திறமையே தன்னடக்கமாகும்.

பந்தயத்தில் போட்டியிடுபவர்கள் தம்மை எல்லாவகையிலும் ஒடுக்குவர். **"பந்தயத்தில் போட்டியிடுகிறவர்கள் எல்லோரும் தங்களை எல்லாவகையிலும் ஒடுக்குகிறார்கள். அவர்கள் அழிவுறும் வெற்றிவாகை பெறுவதற்காக இப்படிச் செய்கிறார்கள். நாமோ அழியாத வெற்றிவாகை அடைவதற்காக இப்படிச் செய்கிறோம்"** (1கொரிந் 9:25)

நாம் ஆவிக்குரிய வாழ்வு வாழவேண்டுமானால் இவற்றை ஒடுக்கவேண்டும். இன்று இது எமக்குத் தேவையாக உள்ளது. தொலைக்காட்சி, பத்திரிகை மூலமும், மற்றவர்களது நடை உடை பாவனைமூலமும் எமது ஆசைகள் அதிகரிக்கின்றன. போட்டியான வாழ்வு வளர்ந்து வருகிறது. யுத்தமும், அழிவும் அதிகரித்து வருகிறது. நாம் உண்மையான வெற்றிவாழ்வை அறியாது வாழ்கிறோம். பழிவாங்க ஆசைப்படுகிறோம். இது குடும்பத்திலும் சமுதாய வாழ்விலும் அன்றாடவாழ்வில் நடக்கின்றது. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? என்றே வாழப்பார்க்கிறோம்.

ஆகவே தூய ஆவியின் கனிகளில் ஒன்றாகிய தன்னடக்கம் எமக்குத் தேவை. இல்லையேல் வருமானத்துக்குமேல் செலவு அதிகரிக்கும். குடும்பம் சிதையும், எமது கூட்டுக்குடும்பம், நாடு சிதையும். அலங்கோலமாகும். வளர்ந்து வரும் சிறார்களுக்கு நல்ல பெறுமதியான வாழ்வைக் காட்ட முடியாமல் போய்விடும்.

*செபம்:*

அன்பான பிதாவே, உமது குமாரன் இக்கட்டான நேரத்திலும் உமது விருப்பத்தை நிறைவேற்றவே ஆசைப்பட்டார். அதேபோன்று எமது ஆசைகளை ஒடுக்கி உமக்கு விருப்பமானதைச் செய்ய வரந்தாரும். தன்னடக்கத்தைத் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 12. ஆவிக்குள் வாழ்வு

**"ஆவியானவரே நமக்கு உயிர் ஊட்டுபவராயின் ஆவியானவர்காட்டும் நெறியிலேயே நடப்போமாக. வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கொருவர் எரிச்சல் ஊட்டாமலும் ஒருவரைப் பார்த்து ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போமாக"** (கலாத்தி 5:25-26)

சாதாரண மக்கள் வீண் பெருமை காட்டுவர். ஆனால் ஆவியில் வாழ்வோர் கிறிஸ்துவின் சிலுவையில் பெருமைபாராட்ட வேண்டும். (1கொரிந் 1:17-25)

நாம் ஆவியினால் வழிநடத்தப்படுகிறோம் என்பதற்குத் தெளிவான அடையாளம் எது? நாம் அன்பில் மேற்கொள்ளும் வாழ்க்கையே (கலாத்தி 5:22-23)

ஆவியின் ஏவுதலின்படி வாழ்ந்தால் ஊனியல்பின் இச்சசைகளை நிறைவேற்றமாட்டோம். (கலாத்தி 5:16-17) ஆவியின் ஏவுதலின்படி வாழ்ந்தால் எந்த ஊனியல்பின் செயலும் எமக்குத் தீங்கு விளைவிக்க முடியாது (கலாத் 5:16-21) நாம் இறையரசுக்காக வாழ்பவர்களே.

இன்று எமது வீட்டில்; குடும்பத்தில், சூழலில், பங்கில் என்னில் இறையரசு கட்டப்படவேண்டும். இறையரசின் குணங்களான அன்பு, நீதி, எளிமை வாழ்வு, சமத்துவம், சகோதரத்துவம், பகிர்ந்து வாழ்தல் ஒற்றுமை, மன்னிப்பு போன்ற இலட்சணங்கள் வளர வேண்டும். இவற்றை வளர்க்க நாம் இறைவனுக்கு இடங்கொடுக்க வேண்டும்.

இன்றைய நாளில் இறையரசின் இலட்சணங்கள் என்னில் வளர இறைவனுக்கு இடங்கொடுக்கப்போகிறேன் எனத் தீர்மானம் எடுப்போமா? உலகம், சரீரம், பசாசு இம்மூன்றும் ஆவியில் வாழ தடைபோடலாம். அதில் விழிப்பாயிருக்கவேண்டும். இல்லையேல் இறைவிருப்பத்தை அறியமுடியாது போய்விடும்.

நாள்தோறும் செபம் செய்வேன் என்று இன்று தீர்மானம் எடுப்போமா?

***செபம்:***

அன்பான பிதாவே! ஆவியில் வாழ என்னை அழைத்துள்ளாய். ஆனால் ஆவியில் வாழ முடியாது உலகம், சரீரம், பசாசு எனக்குச் சோதனைகளைத் தருகின்றது. இதைவெல்ல எனக்கு வரந்தாரும். உமது அரசை என்னிலும் குடும்பத்திலும், சமுதாயத்திலும் கட்டியெழுப்ப வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 13. கெட்ட நடத்தை

(எபேசி 5:19-21) திருமணம் முடிக்காத ஆண், பெண் கலவி (Fornication), பரத்தன்மை, பாலுணர்வு சார்ந்த தீயொழுக்கம், சிற்றின்பவேட்கை போன்ற கற்புக்கு எதிரான பாவங்கள் அனைத்தையும் இதுகுறிக்கிறது.

புனித சின்னப்பர் கெட்ட நடத்தையை வன்மையாகக் கண்டிக்கிறார். **"உங்களிடையே கெட்ட நடத்தை இருப்பதாக எங்குமே பேச்சு, ஒருவன் தன் தந்தையின் மனைவியை வைத்துக்கொண்டிருக்கிறானாம். இத்தகைய கெட்ட நடத்தை புற இனத்தாரிடையில் கூட இருக்காது. இப்படியிருந்தும் நீங்கள் இறுமாந்திருக்கிறீகள்..."** (1கொரிந் 5:1-5)

கிறிஸ்தவன் கெட்ட நடத்தையை முற்றிலும் விட்டு விடவேண்டும். **"நீங்கள் பரிசுத்தராவதே கடவுளின் திருவுளம்: அதாவது கெட்ட நடத்தையை விட்டு விடவேண்டும். கடவுளை அறியாத புறவினத்தார் காம இச்சைகளுக்கு இடங்கொடுப்பது போல் நீங்கள் செய்யாமல், உங்களுள் ஒவ்வொருவரும் தன் உடலை அடக்கி ஆண்டு மரியாதையாய் நடத்தி பரிசுத்தமாய் காப்பாற்ற அறிந்திருக்க வேண்டும்"** (தெசலோ 4:3-5)

காரணம் உடல் காமத்துக்கென்று இல்லை. **"உடல் காமத்துக்கென்று இல்லை. ஆண்டவருக்கென்றுஇருக்கிறது"** (1கொரிந் 6:13)

அதுமட்டுமல்ல எமது உடல் எமக்குச் சொந்தமல்ல. இறைவனுக்கே சொந்தமானது. **"உங்களுடைய உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் அந்த ஆவியைக் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டீர்கள். ஆகவே நீங்கள் உங்களுக்குச் சொந்தமல்ல. ஏனெனில் நீங்கள் விலைகொடுத்து வாங்கப் பெற்றீர்கள். ஆகவே உங்கள் உடலில் கடவுளை மகிமைப்படுத்துங்கள்"** (1கொரி 6:19-20)

மேற்கூறிய வாசகங்களில் இருந்து எமக்குத் தெரிவது என்ன? நாம் எமக்குச் சொந்தமல்ல. எமது உடல் தூய ஆவியின் ஆலயம். அதனால் அதைப் பரிசுத்தமாக வைத்திருக்கவேண்டும். கணவன் மனைவியும் மட்டுமே உடலுறவுகொள்ளவேண்டும். அது திருவருட்சாதனமாகும். ஏனையவை பாவமாகும்.

**"உங்களுக்குள் யாரும் கடவுளின் அருளை இழந்து போகாமலும், கசப்பான நச்சுவேர் எதுவும் உங்களுள் முளைத்துக்கேடு விளைவிக்காதபடியும், அதனால் பலர் கெட்டுப்போகாமலும் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுள் யாரும் காமுகராகவோ, ஏசாவைப்போல் உலகப்பற்றுள்ளவராகவோ இராதபடி கவனமாயிருங்கள்"** (எபிரே 12:15)

இன்று காம உணர்வைத் தூண்டக்கூடிய படங்கள், பாடல்கள், காட்சிகள், புத்தகங்கள் மலிந்துள்ளன. இவற்றின்மூலம் எமது காம உணர்வு தூண்டப்படுகிறது. அதனால் குடும்பங்களில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. கணவன் மனைவிக்கிடையில் ஒற்றுமையில்லை. வேறு தொடர்புகளை அன்புக்காக, காம இன்பத்துக்காக வைக்கத் துடிக்கிறோம். ஆனால் இவற்றில் உண்மையான அமைதி இல்லை. இறை அமைதி அவரது அன்பை அனுபவிக்கும்போதே கிடைக்கிறது. (பிலிப்பி 4:4-7)

*செபம்:*

அன்பான பிதாவே! உலகம், சரீரம், பசாசு எனது காம உணர்வைத்தூண்டுகிறது. காமத்தைப் பிழையாகப் பாவிக்கத்தூண்டுகிறது. இதை உமது மகிமைக்காக, உமது அன்பை அனுபவிக்க கணவன், மனைவியுடன் மட்டும் பாவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 14. அசுத்தம்

அசுத்தம் என்பது தூசி முதலியவற்றை முதலில் குறித்தது. பழைய ஏற்பாட்டில் கோவிலில் நிறைவேற்றப்படும் திருச்சடங்கு சார்ந்த அசுத்தத்தை, கடவுள் திருமுன் வரமுடியாத நிலையைக் குறித்தது. (லேவி 20:25, 22:3) இறுதியாக அசுத்தம் என்பது காமத்தைக் குறித்தது, (ஓசே 2:10) தீய செயல்களை மட்டுமல்ல தீய எண்ணங்களையும் இச்சொல் குறிக்கும்.

**"தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்"** (புனித மத்தேயு 5:8)

**"ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்குபவன் எவனும் ஏற்கனவே தன்னுள்ளத்தில் அவளோடு விபசாரம் செய்தாயிற்று"** (புனித மத்தேயு 5:28)

எமது மனதில் எப்படிப்பட்ட சிந்தனைகளை வளர்க்கிறோம்? நல்லதை நினைத்தால் நல்லது நடக்கும்.

**"தூய உள்ளத்தோருக்கு எல்லாம் தூயவையே மாசுள்ள மனத்தினருக்கும், விசுவாசம் இல்லாதவர்க்கும் எதுவுமே தூயதாயிராது. அவர்களுடைய மனமும் மனச்சாட்சியும் கூட மாசுள்ளவையாயிருக்கின்றன"** (தீத்து 1:15)

எமது அன்றாட வாழ்வில் குடும்பத்திலும் சமுதாயத்திலும் நாம் வாழ்கிறோம். பல நபர்களைச் சந்திக்கிறோம். பல காட்சிகளைக் காண்கிறோம். எமது மனம் மாசுபடிந்துபோகிறது. தீய எண்ணங்கள் தோன்றுகின்றன. அந்த எண்ணங்களால் ஒருவர் ஒருவரைப் பகைக்கிறோம். வெறுக்கிறோம். எமது உறவு பழுதுபடுகிறது. உறவு முறிந்தவுடன் தாங்கமுடியாத துன்பம் வேதனைக்கு ஆளாகிறோம். இதனால் இதைமறைக்க, மறக்க குடிக்கிறோம். காமத்தைப் பிழையாகப் பாவிக்கிறோம். அல்லது வெவ்வேறு தீய செயல்களில் ஈடுபடுகிறோம். சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுகிறோம். இதனால் எமக்கும் நிம்மதியில்லை. மற்றவர்களுக்கும் நிம்மதியில்லாது கவலைப்படுகிறோம்.

இன்று எமது மனதைச் சோதித்துப்பார்ப்போம். எமது செயலைச் சோதித்துப் பார்ப்போம். இறைவனுக்கு உகந்ததாக உள்ளதா? அல்லது பாவம் நிறைந்ததாக உள்ளதா? பாவம் நிறைந்திருந்தால் இறைவனது அன்பை அனுபவிக்கத்தடையாக இருக்கும். அமைதி, நிம்மதி சந்தோசம் இல்லாது போய்விடும். ஆகவே அசுத்தமான சிந்தனைகள் செயல்களைக் கைவிட ஆசைப்படுவோம்.

*செபம்:*

அன்பான பிதாவே! உமது அன்பை அனுபவிக்க வரந்தாரும். நல்லதைச் சிந்திக்க நல்லதைச் செய்ய, நல்லதைச் சொல்ல வரந்தாரும். அதற்குத் தடையாக உள்ள அனைத்தையும் வெற்றிகொள்ள வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 15. காமவெறி

இயல்புக்கு மாறான பாலுணர்ச்சியைப் பயன்படுத்தத் தூண்டும் நிலை. (sex Perversion) திருமண ஒழுங்கீனம், வியாபாரம், போன்ற ஒழுக்கக் கேடுகளைக் குறிக்கும்.

இன்று தன்னின வேட்கை அதிகரித்து ஆண் ஆணுடனும், பெண் பெண்ணுடனும் காம இச்சைக்கு உட்படுவதைக் காண்கிறோம். அது பாவமில்லை என்று வாதிடுவோரும் உள்ளனர்.

**"கடவுள் அவர்களை வெட்கக்கேடான இச்சைகளுக்குக் கையளித்து விட்டார். பெண்கள் இயல்பான முறையை விட்டு இயல்புக்கு மாறாக நடந்து கொண்டனர். அவ்வாறே ஆண்களும் பெண்களோடு சேரும் இயல்பான முறையை விட்டு ஒருவர் மீது ஒருவர் வேட்கைகொண்டு காமத்தீயால் பற்றி எரிந்தனர். ஆண்கள் ஆண்களுடன் இழிவான செயல்களைச் செய்து தங்கள் ஒழுக்கக்கேட்டுக்கு ஏற்ற கூலியைத் தங்களிலேயே பெறுபவர் ஆயினர்...."** (உரோமை 1:26-32)

ஆணும் பெண்ணும் சேருவதை வேதாகமம் கணவன் மனைவியோடு தொடர்பு படுத்தியே கூறுகிறது.

**"மனைவிக்குத் தன்மேல் உரிமையில்லை. கணவனுக்கோ அந்த உரிமையுண்டு. ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமையை மறுக்காதீர்கள். செபத்தில் ஈடுபடுவதற்காகச் சிறிது காலத்திற்கு அக்கடமையைச் செய்யாமலிருக்கலாம். ஆனால் அதற்கு இருவரும் உடன்பட வேண்டும். அதன்பின்முன் போல் கூடிவாழுங்கள். இல்லாவிட்டால் தன்னடக்கக்குறைவைப் பயன்படுத்தி, சாத்தான் உங்களைச் சோதிப்பான்"** (1கொரிந் 7:4-5)

மேலும் **சுயஇன்பமும் தவறானது.** ஓனான் செய்தது பெரிய அக்கிரமம் என்று ஆண்டவர் அவனை அழித்துவிட்டார். (ஆதி 38:9)

இன்று இப்படிப்பட்ட பாவங்கள் பாவமில்லை என்ற கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இதனால் இயற்கையின் அழிவும் நோய்களும் பெருகிவருகின்றன. திருமணவாழ்வு குலைகிறது. ஒற்றுமை அழிகிறது. அன்பு வற்றிப்போகிறது. எதிர்பாராத பிரிவினைகள் போட்டிகள் உருவாகின்றன.

ஆகவே காமவேட்கையை அதிகரிக்கும் படங்கள், காட்சிகளைப்பார்க்காமலும், புத்தகங்களை வாசிக்காமலும், கெட்ட நண்பர்களுடன் சேராமலும் இருப்போம். முடிந்தவரை மனத்தைத் தூய்மையாக வைத்திருக்க ஆசைப்படுவோம்.

*செபம்:*

அன்பான பிதாவே! உமது அன்பை உண்மையாக அனுபவிக்க வரந்தாரும் காமத்தைப் பிழையாகப் பாவிக்காமலிருக்க வரந்தாரும். இதனை உணர்ந்து கணவன் மனைவி செயற்பட ஞானத்தைத் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 16. சிலை வழிபாடு

சிலைவழிபாடு என்பது என்ன? இதைப்பற்றிய தெளிவான விளக்கம் தேவைப்படுகிறது. காரணம் இதைப்பற்றிய தவறான விளக்கம் பலரில் இருப்பதைக் காண்கிறோம்.

சிலையானது அது குறித்துக்காட்டும் கடவுளை இட எல்லைக்குட்படுத்தியது. கட்புலனாக்கியது. காலப்போக்கில் கடவுளை மறந்து சிலையையே தெய்வமாக மக்கள் வணங்கத் தொடங்கினர். படைத்தவரை மறந்து படைப்பை வணங்குவது சிலைழிபாட்டிலுள்ள தவறாகும். (உரோ 1:19-23)

மேலும் பொருளாசை விக்கிரக ஆராதனை என்று கூறுகிறார் புனித சின்னப்பர். **"கெட்ட நடத்தை கற்பின்மை, காமம், தீய இச்சைகள், சிலைவழிபாட்டுக்கு ஒப்பான பொருளாசை ஆகியவற்றை ஒழித்து விடுங்கள்"** (கொலோசி 3:5)

உண்மைக் கடவுளுக்கு முதலிடம் கொடுக்காமல் வேலை, கணவன், மனைவி, மக்கள், பொருள் போன்றவற்றிற்கு முதலிடம் கொடுப்பது விக்கிரக ஆராதனையே. மேலும் கீழ்ப்படியாமை சிலைவழிபாட்டுக்குச் சமனாகும்.

இந்தவகையிலே எமது சிலைகளை உடைத்துவிட்டு மனதில் பலர் விக்கிரக ஆராதனை செய்வதைக் காண்கிறோம். எமது அன்றாடவாழ்வில் இறைவனுக்கு முழு உள்ளத்தோடும் முழு மனதோடும் அன்பு செய்கிறோமா? முதலிடம் கொடுக்கிறோமா? அல்லது இவற்றிற்கு முதலிடம் கொடுக்கிறோமா? சிலர் தனது இனம், மொழி போன்றவற்றைக்கூட சிலைவழிபாடு செய்வர். மொழிப்பற்று தேவை. ஆனால் மொழிவெறிகூடாது. இனப்பற்று நாட்டுப்பற்றுத்தேவை. ஆனால் இனவெறி, நாட்டு வெறிகூடாதது.

எமது சிறுவர்கள் எம்மிடமிருந்து எதைப் பழகுகின்றனர்? இறைவனுக்கு முதலிடம் கொடுப்பதையா? அல்லது படைப்புகளுக்கு முதலிடம் கொடுப்பதையா?

*செபம்:*

**அன்பான பிதாவே! எனது வாழ்வில் உமக்கு முதலிடம் கொடுக்கவரந்தாரும். பொருளாசை, கீழ்ப்படியாமையாகிய சிலைவழிபாட்டைக்கைவிட வரந்தாரும். ஒருவருக்கோ ஒன்றுக்கோ முதலிடம் கொடுக்காமல் உமக்கு முதலிடம் கொடுக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.**

# 17. பில்லி சூனியம்

மாயஜாலம், மந்திரிகம் போன்றவை இதில் அடங்கும்.

**"உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கும் நாட்டில் நீ புகுந்த பின்பு அந்த மக்களுடைய வெறுக்கத்தக்க நடத்தைகளைப் பின்பற்றத்துணியாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு. தன் புதல்வனையேனும், புதல்வியையேனும், சுத்திகரிப்புக்கென்று தீயைக்கடக்கச் செய்பவனும், குறிசொல்லுகிறவர்களிடம் அறிவுரை கேட்பவனும், கனவுகளையும் சகுனங்களையும் நம்புகிறவனும், சூனியக்காரனும் உங்களுக்குள்ளே இருத்தலாகாது. மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாய வித்தைக்காரனும், இறந்தவர்களிடம் குறி கேட்கிறவர்களும் உங்களுக்குள்ளே இருத்தலாகாது. ஏனென்றால் ஆண்டவர் இவற்றையெல்லாம் வெறுக்கிறார்..."** (உப 18:9-10)

பேயின் சக்தியால் வருங்கால காரியங்களைக் கூறமுடியுமென்று வேதாகமத்தில் கூறப்படுகிறது. (அப். பணி 16:6)

**"சகுனம் பார்க்கவும் வேண்டாம். கனவுகளுக்குப் பொருள் தேடவும் வேண்டாம்.. நீங்கள் தீட்டுப் படாதபடிக்கும் பில்லி சூனியக்காரரை நாடவும், குறிசொல்லும் சகுனக்காரரிடம் யாதொன்றைக் கேட்கவும் வேண்டாம்"** (லேவி 19:26-31)

சிலர் பயத்தின் நிமித்தம் நூல், தகடு, தாயத்து போன்றவற்றை இடுப்பிலும், கையிலும் கழுத்திலும் கட்டுவர். செய்வினை உள்ளது. தோண்டி எடுக்கவேண்டும் என்பர். உண்மையில் இறைவனை நம்புபவர்களுக்கு இவை எதுவும் செய்யாது.

இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் நேரம் பார்க்கிறோம். அசுத்த ஆவிகளை நம்புகிறோம்.

**"நீங்கள் நாள், திங்கள், காலம், ஆண்டு இவற்றைப் பார்க்கிறீர்களே. உங்களுக்காக நான் உழைத்தது வீண்தானே? என அஞ்சவேண்டியிருக்கிறது"** (கலா 4:10-11)

எமது வாழ்வில் நோய், தோல்வி, பிரச்சினைகள் வரும்போது இறைவனை நம்பாது இப்படிப்பட்டவைகளில் நம்பிக்கைவைக்கிறோம். இவை தவறு என்பதை இன்று அறிந்து கொண்டோம். அதனால் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

*செபம்:*

அன்பான பிதாவே! உம்மை மட்டும் வணங்கவும், எனது வாழ்வில் உமக்கு மட்டும் முதலிடம் கொடுக்கவும் வரந்தாரும். நூல்கட்டவும், சாஸ்திரம்பார்க்கவும் பில்லி சூனியத்தை நம்பிப் பயப்பிட்டு எனது மனதைக் குழப்பாமலும் வாழ எனக்கு வரந்தாரும். உம்மை நம்பி உமக்கு அன்பு செய்ய வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 18. பகைமை

**"பகைகொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்**
**தீராத கோபம் யாருக்கு லாபம்"**

என்று ஒரு கவிஞன் பாடினான். ஒருவர் எனக்குப் பிடிக்காததைச் செய்யும்பொழுது எமக்குக் கோபம்வருகின்றது. கோபம் கூடியவுடன் மனமுதிர்ச்சி இல்லாத ஒருவரானால் மற்றரைப் பழிவாங்க ஆசைப்படுகிறோம். வழிவாங்குவதில் ஒரு திருப்தியைக் காண்கிறோம். அதன் பின்பே மன அமைதி அடைகிறோம். இதனால் குடும்பத்தில் பிரிவு, போட்டி, வேதனை, துன்பம் ஏற்படுகின்றது.

**"அவருடைய ஆவியினால் உங்கள் உள்மனதில் நீங்கள் வலிமையும் ஆற்றலும் பெறும்படி அருள்வாராக. விசுவாசத்தின் வழியாக கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடிகொள்வாராக. அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடிப்படையுமாக அமைவதாக. இவ்வாறு நீங்கள் இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத இந்த அன்பை அறியும் ஆற்றல் பெறுவீர்களாக, கடவுளுடைய முழு நிறைவையும் அடையும் அளவுக்கு நிரப்பப்படுவீர்களாக"**
(எபேசி 3:16-19)

புனித சின்னப்பர் கூறும் அன்பின் அனுபவத்துக்கு வரும்பொழுது எம்மில் இருக்கும் பகை நீங்கி ஒற்றுமை, மன்னிப்பு, சமத்துவம் அமைதி நிலவும். அது முதலில் என்னிலும் குடும்பத்திலும், சங்கத்திலும், சமுதாயத்திலும் நிலவும்.

இன்று எமது குடும்பங்களில், சங்கத்தில் சமுதாயத்தில் பகைபரவுகிறது. பகை பரவி மற்றவர்களின் உள்ளத்திலும் நெருப்பை உண்டுபண்ணி எரிகிறது. ஆனால் தூய ஆவியின் அன்பின் அக்கினி எரியும்போது எமது பகை தணிகிறது.

***செபம்:***

அன்பான பிதாவே! தூய ஆவியின் அக்கினியைப் பற்றி எரியச் செய்தருளும். அதன்மூலம் எனது உள்ளத்திலுள்ள பகை எண்ணம் அணைந்துபோக உதவியருளும். உமது அன்பு என்னைக்குணப்படுத்தட்டும். உமது அன்பின் அகலம், நீளத்தை அனுபவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 19. சண்டை சச்சரவு

பகைமையின் விளைவே சண்டை சச்சரவு.

**"கோபமுள்ள மனிதன் வழக்கை மூட்டுகிறான். பாவி நண்பரைக்கலைப்பான், சமாதானம் உள்ளவர்கள் நடுவில் பகையை விளைவிக்கிறான்"** (சீராக் 28:11)

கிறிஸ்தவன் ஐக்கியமாக வாழ அழைக்கப்பட்டதால் சண்டை சச்சரவைத்-தவிர்க்க வேண்டும்.

**"களியாட்டம், குடிவெறி, காமம், ஒழுக்கக்கேடு, சண்டை, பொறாமை ஆகிய இவற்றையெல்லாம் தவிர்த்து ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள்"** (உரோம 13:13)

சண்டை சச்சரவு குடும்பத்திலும், சபையிலும் பிளவுகளை ஏற்படுத்துகிறது. **"உங்களிடையே சண்டை சச்சரவுகள், பொறாமை, சினம், கட்சிமனப்பான்மை, கோள், புறணி, செருக்கு, குழப்பங்கள் முதலியன இருக்கக்காண்பேனோ, என்னவோ!'** (2கொரி 12:20) என்று கூறுகிறார்.

எமது குடும்பத்தில், வாழும் சூழலில் சண்டை சச்சரவு தலைதூக்கியுள்ளதா? இதனால் நிம்மதி, சந்தோசம், சமாதானம் இழந்து தவிக்கிறோமா? ஒற்றுமையுள்ள இடத்தில் சந்தோசம் சமாதானம், பிறக்கிறது. இறை அன்பை அனுபவிக்குமிடத்தில் விடுதலை, அன்பு ஒற்றுமை நிலவும்.

இன்று யுத்தம், சண்டை என்பது முழு உலகிலும் மலிந்து காணப்படுகின்றது. ஆயுத உற்பத்தி செய்பவர்கள் இலாபம் பெறுகின்றனர். சண்டை, யுத்தம் அதிகரிக்கும் அளவுக்கு அவர்களுக்கு மகிழ்ச்சியே.

வீதியால் போகும்பொழுது ஒரு மிருகம் துடித்துக் கொண்டிருந்தால் ஓடிப்போய் தண்ணீர் கொடுக்கும் மனிதப் பண்பில் வளர்க்கப்பட்ட நாம், இன்று மிகவும் மோசமான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம். யுத்தமன நிலையில் வாழ்கிறோம். குழந்தைகள் அன்பை அறியாது வளர்கிறார்கள். கணவன் மனைவிக்கிடையில் எந்தநாளும் சண்டையைக்காணும் பிள்ளையின் மனம் கடுமையாகிறது. யுத்த சூழலில் வளரும் பிள்ளையின் மனம் பாதிக்கப்படுகிறது. இப்பிள்ளைகள் வளர்ந்தால் அன்பைக் கொடுக்கத் தெரியாதவர்களாக வளர்கிறார்கள். இது மிகவும் மோசமான ஏழ்மை நிலையாகும்.

*செபம்:*

அன்பான பிதாவே! உமது மாறாத அன்பு ஒன்றே எமக்கு விடை. சண்டை சச்சரவில் அகப்பட்டுப் பழிவாங்கத் துடிக்கும் எமக்கு உமது ஆவியின் கனிகளைத்தாரும். உமது அன்பை அனுபவித்து நோய்வாய்ப்பட்ட சமுதாயத்தை உமது அன்பால் அன்பு செய்ய வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 20. பொறாமை

பொறாமை என்பது உணர்வு. ஒருவரது வளர்ச்சியைக் கண்டதும் எமது மனதில் பொறாமை உணர்வு ஏற்படுகின்றது. இது இயற்கையே. இந்த பொறாமை உணர்வு என்னை நிர்வகித்து அதற்கு நான் அகப்பட்டு செயலில் இறங்குகிறேனா. அப்போதுதான் பிழை நடக்கின்றது.

குழந்தைப் பருவத்தில் ஒரு பிள்ளைக்கு மற்றப்பிள்ளையில் பொறாமை ஏற்படுவது இயற்கை. உடனே சிறுபிள்ளை செயலில் இறக்குகிறது. அடிக்கிறது. அல்லது நிலத்தில் விழுந்து அழுகிறது. அது பிழையில்லை. அந்தச்சந்தர்ப்பத்தில் பிள்ளையைப் பெரியோராகிய நம் வழிநடத்துகிறோமா?

சிறுவயதில் தந்தையின் அன்பை அறியாதபிள்ளை வளர்ந்ததும் மற்றவர்களில் பொறாமை கொள்கிறது. மற்றவர்களின் வளர்ச்சி, முன்னேற்றத்தைக் கண்டு சகிக்கமுடியாமல் துடிக்கிறது. மற்றவர் விசேடமாகும்பொழுது தன்னால் விசேட-மான ஒருவராக வர முடியவில்லையே என ஏங்கி மற்றவர்களை இருளாக்குகிறது. மற்றவர்களது அனுதாபத்தை எடுக்கக்கூடியவிதத்தில் நடமாடுகின்றது.

இவையாவும் மனமுதிர்ச்சிக் குறைவையே காட்டுகின்றன. சிறுபிள்ளை பொறா-மையில் செயற்படுவது இயல்பு. ஆனால் வளர்ந்ததும் பொறாமை உணர்வுக்கு அகப்பட்டு செயல்பட்டால் அதுதவறாகும். ஆவியில் நிரம்பி தூய ஆவியின் கனி-களை அனுபவிக்கும் ஒருவன் பொறாமை உணர்வு தன்னை வழிநடத்த இடங்கொடுக்கமாட்டான்.

இன்று பொறாமைக்கு அகப்பட்டுத் துன்பப்படும் குடும்பங்கள் எத்தனை? எத்தனை?.. இதனால் போட்டி, பழிவாங்குதல், புறணி போன்ற குடும்பச்சிதைவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

பழைய ஏற்பாட்டில் "பொறாமையுள்ள அல்லது எரிச்சலுள்ள கடவுள்" என்று (யாத்தி 20:4-5) கூறப்படுகிறது. இங்கு இஸ்ராயேல் குலத்தைத் தம் மணமகளாக இறைவன் ஏற்றுக்கொண்டார். அவள் தனக்கு மட்டுமே அன்பு செய்ய வேண்டும் என்று விரும்பினார். இதை எடுத்துரைக்கவே நல்ல பொருளில் இறைவாக்கினர் கூறினர்.

ஆனால் பொறாமை தீய குணமாக செயற்படுவதை சின்னப்பர் கூறுகிறார் (உரோ 13:13)

*செபம்:*

அன்பான பிதாவே! என்னில் ஏற்படும் பொறாமை உணர்வுக்கு நான் அகப்படாமல் வாழ வரந்தாரும். பொறாமையில் மற்றவர்களை உள்ளாக்காது எளிமையாக வாழ வரந்தாரும். பொறாமையில் உள்ளாக்குவதும், உள்ளாகுவதும் தவறு என்பதை உணர்ந்து கொண்டேன். என்னை மாற்றியமைக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 21. சினம்

சினம், கோபம் என்பது உணர்வே. எமக்கு விருப்பமில்லாதது நடக்கும்போது எம்மில் சினம், கோபம் உருவாகின்றது. இது சரியும் இல்லை. பிழையும் இல்லை. ஆனால் இந்த உணர்வு எம்மை வழிநடத்தி செயலில் இறங்கினால் அதுதவறாகிறது. இதனை அடக்காமல் இதனைக் கையாள, அழகாக மற்றவர்களைத் தாக்காத விதத்தில் வெளியிடப்பழக வேண்டும். மற்றவர்களை அழிப்பதானால் சினம் பிழையாக மற்றவர்களுக்குத்தோன்றுகிறது.

**"மனக்கசப்பு, சீற்றம், சினம், வீண் கூச்சல், பழிச்சொல் ஆகிய அனைத்தும் உங்களை விட்டொழியட்டும். எல்லாவகையான தீய மனமும் நீங்கட்டும். ஒருவருக்கொருவர் பரிவும் இரக்கமும் காட்டுங்கள். கிறிஸ்துவுக்குள் கடவுள் உங்களை மன்னித்தது போல் நீங்களும் ஒருவரையொருவர் மன்னியுங்கள்"** (எபேசி 4:31-32)

**"சினம், சீற்றம், தீயமனம் ஆகியவற்றையெல்லாம் நீக்குங்கள். பழிச்சொல் நாணங்கெட்ட பேச்சு எதுவும் உங்கள் வாயில் வராதிருக்கட்டும்"** (கொலோசி 3:8)

எமது குடும்பத்தில், சங்கத்தில், பங்கில், சமுதாயத்தில், காரியாலயத்தில் கடுஞ்சினத்தை வெளிப்படுத்துகிறேனா, குறிப்பிட்ட நபர்களுடன் மனம்விட்டுப் பேசி எனது அடிமனதிலுள்ள சினத்தைத் தணிக்க முடியாதா?

தன்னலம், அகங்காரம் போன்றவற்றால் வரும் சினம் தவறானது. இதனால் இன்று எத்தனை குடும்பங்கள் பிரிந்துள்ளன? எத்தனை பிள்ளைகளின் வாழ்வு சிதைந்து போகின்றது.

ஒருவனது உணர்ச்சிக்குப் பொறுப்பு அவனேதான். எனது இசைவின்றி பிறர் எவரும் எனது உணர்ச்சியை எழுப்பமுடியாது. ஒருவன் சினமுற்றால் அதற்கு அவன்தான் முழுப்பொறுப்பு. வீணாக அதைப்பிறர்மீது சுமத்துகிறோம்.

ஒருவன் உங்களைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்கிறான் என வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அவன் மீதுசீறி விழுகிறீர்கள். உங்களது சினத்துக்கு முழுக்காரணம் அவனில்லை. சினம் உங்கள் மனதில் முற்றி நிற்பதே அடிப்படைக் காரணமாகும். அவனது கேலிச்சிரிப்பு உங்கள் சின உணர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்தது. அவ்வளவுதான். ஒருவன் உங்களைப்பார்த்து எவ்வளவுதான் ஏளனம் செய்தாலும் உங்களால் அதைப்பொருட்படுத்தாமல் இருக்கலாம் சமாளிக்கமுடியும்.

*செபம்:*

அன்பான பிதாவே, எனக்குள் அடக்கிவைத்திருக்கும் சினத்தைக் கண்டுபிடித்து அதைக்கையாள அடக்கியாள எனக்கு வரந்தாரும். உமது அன்பால் நிரம்பி தூய ஆவியின் கனிகளை அனுபவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 22. கட்சி மனப்பான்மை

சுயநல நோக்கத்தினால் சபையில் ஏற்படும் உட்பூசலை, போட்டி மனப்பான்மையைக் குறிக்கும்.

**"கட்சி மனப்பான்மை உள்ளவர்களாய், உண்மைக்குப் பணியாமல் அநியாயத்திற்குப் பணிபவர்களின் தலைமேல் அவருடைய சினமும் வெகுளியும் வந்து விழும்"** (உரோமை 2:8)

**"கட்சிமனப்பான்மையால் கிறிஸ்துவை அறிவிக்கின்றனர். அவர்களது நோக்கம் நேர்மையானதன்று"** (பிலிப்பி 1:17)

எம்மிடையே சுயநலத்தால், வைராக்கியத்தால் ஏற்படும் கட்சி மனப்பான்மை எம்மை அழிவுக்குக் கொண்டு செல்கிறது.

கணவனும் மனைவியும் சண்டை பிடித்தால் அவர்கள் இருவருக்கிடையிலும் பிளவு ஏற்பட்டால் பிள்ளைகள் அம்மாவின் பக்கமா? அப்பாவின் பக்கமா எனத் திண்டாடுகிறார்கள். ஒரு சபையில் தலைவர்களுக்கிடையில் பிளவு ஏற்பட்டால் அவர்களைச் சுற்றி குழுக்கள் ஏற்படுகின்றன. இடையில் உள்ள மக்கள் எந்தக் கட்சியில் நாம் இருப்பது என்ற சிக்கல் ஏற்படுகிறது. பெரும்பாலும் இது குடும்பத்துக்கும், திருச்சபைக்கும், சங்கத்துக்கும் பொருந்தும்.

எமது குடும்பத்தில், சபையில் இறைவன் கட்சிமனப்பான்மையை வெறுக்கிறார். நாம் இறைவனது பக்கமே செயற்படவேண்டும். உண்மை, நீதி, நேர்மையின் படியே செயற்படவேண்டும். கட்சி மனப்பான்மை உருவாகினால் எம்மிடையே பிளவு, போட்டி, அதிகரித்து ஒற்றுமையின்மை ஏற்படுகிறது. ஒற்றுமை குலைந்தால் சந்தோசம், அமைதி இல்லாது போகிறது.

இன்று பலர் கட்சிமனப்பான்மையால் பிளவுபட்டிருப்பதைக் காண்கிறோம். அரசியலில்கூட கட்சிகள் மோதும்போது இடையில் உள்ள மக்கள் அல்லோலகல்லோலப்படுவதை அவதானிக்கிறோம். கொலை, அழிவு போன்ற வேதனையான சம்பவங்கள் அதிகரிப்பதைக் காண்கிறோம்.

வல்லமை, புகழ், பெயர் சொத்து போன்ற ஆசையால் துன்பம் வீடுதேடி வருவதைக்காண்கிறோம். வீடு சவவீடாகக்காட்சியளிக்கிறது. இறைவன் வாழும் ஒளியின் இல்லமாக இல்லை..

*செபம்:*

அன்பான பிதாவே! நிம்மதியை இழந்து, அன்பை இழந்து துன்பப்படுகிறேன். வீட்டிலும், சபையிலும் நாட்டிலும் ஒற்றுமையில்லை. போட்டி, பொறாமை, பழிவாங்குதல் நாளுக்கு நாள் அதிகரிப்பதைக் காண்கிறேன். இதனால் நாளுக்குநாள் துன்பம் கூடுகின்றது. இதிலிருந்து காப்பாற்றி நிம்மதி அமைதியைத் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 23. பிரிவினை

இறைவன் மரங்களை வெவ்வேறாகப் படைத்தார். பூக்களையும் விலங்குகள், பறவைகளையும் வெவ்வேறு வடிவத்தில் படைத்தார். மனிதனும் அவ்வாறே. வேற்றுமைக்குள் ஒற்றுமையைக் காணவே அவனைப்படைத்தார்.

ஆனால் வேறுபட்ட நிலை சுயநலமாக மாறும்போது இனம் மற்ற இனத்தை மதிக்காதபோது தாழ்த்தும்போது, அடிமைப்படுத்தும்போது பிரிவினை ஏற்படுகிறது. எனது இனம், மொழி தான் உயர்ந்தது. ஏனையவை தாழ்ந்தவை என்ற மனப்பான்மை பிரிவினையைத் தோற்றுவிக்கும்.

இன்று எமது குடும்பம், சபை, நாட்டை நோக்கும்போது பல பிரிவினைகளைக் காண்கிறோம். வேற்றுமைக்குள் ஒற்றுமையைக் காண இறைவன் ஆசைப்படுகிறார். ஆனால் மனிதன் தனது சுயநலத்தால் வேற்றுமையில் பிரிவினையை விரும்புகிறான். சுதந்திரத்தை விரும்புகிறான்.

இன்று முழு உலகும் ஓர் கிராமமாக மாறும் அளவுக்குத் தொலைத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி உயர்ந்து செல்கிறது. அதேநேரம் மனிதன் வல்லமை, சொத்து காமம், புகழுக்கு அகப்பட்டு அழிவுப்பாதையில் செல்கிறான். சிறுபான்மை மக்கள்ஒடுக்கப்பட்ட மக்கள்தமது உரிமைக்காகப் போராடுகிறார்கள். பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தைச் சம உரிமைகளோடு நடத்தாததால் பிரிவினைக்கோசம் மேலோங்குகின்றது.

குடும்பத்தில் கூட்டுக்குடும்பம் குறைந்து தனிக்குடும்பங்களே கூடிக்கொண்டு செல்கின்றன.

**"நாம் எல்லோரும் கடவுளின் திருமகனைப்பற்றிய விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பாட்டை எய்துவோம். கிறிஸ்துவினுடைய முழுப்பருவத்தின் அளவை அடைந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாகுவோம்:"** (எபேசி 4:13)

கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சி பெற்ற அனுபவத்துக்கு நாம் வந்தால் அதாவது சரீர, மன, கல்வி, ஆன்மிக முதிர்ச்சி பெற்றவர்களானால் ஒருவர் ஒருவரை மதிப்போம். மற்றவர்களுக்கும் சம உரிமை கொடுப்போம். இறைவனுடைய அழைப்புக்கேற்ப வளர வாய்ப்பளிப்போம். வேற்றுமைக்குள் ஒற்றுமையாக பிரிவினை இல்லாது வாழ சூழலை அமைத்துக்கொடுப்போம். இதன்மூலம் வளர்ந்து வரும் சமுதாயம் கிறிஸ்துவின் முதிர்ச்சிக்குச் செல்ல உதவுவோம்.

*செபம்:*

அன்பான பிதாவே! உமது அன்பின் அனுபவத்தில் முதிர்ச்சிபெற வரந்தாரும். முதிர்ச்சி பெற்ற மக்கள் உருவாக ஆசீர்வதியும். அதன்மூலம் வேற்றுமைக்குள் ஒற்றுமையாக வாழ எமக்கு வரந்தாரும். உமது ஆவியின் வல்லமையும், வழிகாட்டுதலும் எமக்குத் தேவை இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 24. குடிவெறி

யூத கலாசாரத்தில் திராட்சை இரசம் அருந்தும் பழக்கம் இருந்தது. ஆனால் அவர்கள் இரண்டுபங்கு இரசத்தில் மூன்று பங்கு தண்ணீர் சேர்த்தே குடிப்பது வழக்கம். ஆதலால் வெறி ஏற்படுவதில்லை. குடிவெறி தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

"மதுபானம் காமத்தைத் தூண்டக்கூடிய பொருளாம். குடிவெறி குழப்பத்தை உண்டாக்குவதாம். இவற்றில் நாட்டம் கொள்பவன் எவனும் ஞானியாய் இரான்" (பழமொழி 20:1)

"இவர்கள் கூட மதுவருந்தி அறிவிழந்தனர். குடிவெறியால் தடுமாறுகின்றனர். அர்ச்சகரும் தீர்க்கதரிசியும் குடிவெறியால் அறிவிழந்தனர். மதுபானத்தில் மூழ்கிக்கிடக்கின்றனர். குடிபோதையில் தடுமாறுகின்றனர். காணும் காட்சியில் தடுமாறுகின்றனர். தீர்ப்புச் சொல்வதில் தடுமாறுகின்றனர். ஏனெனில் மேசைகள் யாவும் வாந்தியால் நிறைந்துள்ளன. அசுத்தமில்லாத இடமே கிடையாது" (இசை 28:7-8)

மேலும் பழமொழி 23:20-35ல் குடிவெறி தவிர்க்கப்படவேண்டியது என்று வலியுறுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் 1கொரி 5:11, 1கொரி 6:10, கலாத் 5:21 போன்றவற்றிலும் குடிவெறி தவிர்க்கப்பட வேண்டியதாகக் கூறப்படுகிறது.

குடிவெறியால் பொருளாதார நட்டம், சண்டை, சச்சரவு, பிழையான பாவப்பழக்கங்கள் போன்றன மட்டுமல்ல உடலுக்குக் கெடுதருகிறது. நாம் பொய்யான வார்த்தைகளுக்கு ஏமாறுகிறோம்.

"மகிழ்ச்சிக்காகக் குடிக்கிறேன். கவலையை மறக்கக் குடிக்கிறேன். உடல் அலுப்புக்காக குடிக்கிறேன். குடித்தால் கவிதை ஆற்றல் போன்ற திறமைகள் வளரும். பூச்சிக்காகக் குடிக்கிறேன். பசிவரக்குடிக்கிறேன்" இப்படிப்பட்ட பொய்யான வார்த்தைகளுக்கு ஏமாறுகிறோம்.

இன்று எமது பிள்ளைகளுக்கு நாமே குடியைப் பழக்குகிறோம். விருந்துகளுக்குச் சென்றால் அங்கே வைன் எமது பிள்ளைகளுக்குக் கொடுக்கிறோம். அதைக்குடித்துப் பழகியவர்கள் வேறுகுடிவகைகளையும் குடிக்கப்பழகுகிறார்கள். எமது வீடுகளில் சோக்கேசில் மதுசாரம் உள்ள சிறிய போத்தல்களை அழகுக் காட்சிக்காக வைக்கிறோம். இதுவும் பிள்ளைகளைக் குடிக்கத்தூண்டுகிறது. மேலும் நண்பர்கள் மூலம் பிள்ளைகள் குடிக்கப்பழகுகிறார்கள்.

களியாட்டமும் குடிவெறியோடு இணைந்து செல்லும் பாவமாகும். ஒருவருடைய வெற்றியைக் கொண்டாடும்பொருட்டு அவரைத் தெருக்களில், ஊர்வலமாக அழைத்துச் செல்லுதல், அளவுக்கு மீறி உண்டு குடித்தல் போன்றவை இதில் அடங்கும். (உரோ 13:13)

*செபம்:*

இன்றுடன் புகைத்தல், மதுபானம், போதைப்பொருளைக் கைவிட எனக்கு வரந்தாரும். இவற்றை விருந்தினருக்குக் கொடுக்காமல் இன்றோடு நிறுத்த எனக்கு வரந்தாரும். பொய்யான மாயைக்கு அகப்படாமல் இறை அன்பில் நிரம்ப வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 25. பழைய ஏற்பாட்டில் தூய ஆவியானவர்.

எபிரேய மொழியில் இறைவனுடைய ஆவியை "றூஆ", "Ruah" என்றும் கிரேக்கமொழியில் Pneuma"ப்னெவுமா"என்றும் அழைத்தனர். அதாவது காற்று, மூச்சு, ஆவி என்பது பொருள். (ஆதி 8:1, யாத்தி 14:21)

**பழைய ஏற்பாட்டில் தூய ஆவியானவர் தனிநபர் வழியாகச் செயற்பட்டதைக் காண்கிறோம். நீதிபதி 3:9-10, நீதிபதி 14:6, எசேக் 2:12, எசேக் 3:12, 2சாமு 23:2,**

**மேலும் காட்சிகளின் வழியாக ஆண்டவரின் ஆவியானவர் மக்களுடன் பேசினார். ஆபிரகாம் (ஆதி 15:1) யாக்கோப்பு (ஆதி 46:2), எசேக்கியேல் (எசே 1:1), தானியேல் (தானி 1:17, 4:5...) தாவீது (2சாமு 23:2, (ஓசே 9:7), மிக்கேயா 3:8, இசையா 48:16, சக்கரியா 7:12)**

**புதிய ஏற்பாட்டில் தூய ஆவியானவரின் அனுபவம் ஒரு சமூக நிகழ்வாக மாறுகின்றது.** மக்கள் கூடியிருக்கும்போது தமது அருளைப் பொழிந்தார். காரணம் குடும்பமாக, கிறிஸ்துவின் உடலாக பொது நன்மைக்காக வாழ வேண்டுமென்று தமது அருளைப் பொழிந்தார்.

என்னில் தூய ஆவியின் செயற்பாடு இருந்தால் அவரது கனிகளை நான் அனுபவிக்க வேண்டும். ஒற்றுமையாக வாழ வேண்டும். வேற்றுமைகளை மதித்து வேற்றுமைக்குள் ஒற்றுமையாக வாழ வேண்டும். தூய ஆவியானவர் இருக்கும் இடத்தில் விடுதலையை அனுபவிக்க வேண்டும்.

அன்பு செய்ய விடுதலை, பயம், பாவம், துன்பம் எல்லாவற்றிலிருந்தும் விடுதலைபெற்று ஆண்டவருக்குள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். பாவத்தைக்காண வேண்டும். தனிப்பட்ட பாவங்களையும், சமூகமாகச் செய்யும் பாவங்களையும் காண தூய ஆவியானவர் இன்று எமக்கு உதவுகின்றார். அதுமட்டுமல்ல அதிலிருந்து விடுபட்ட அன்பின் வாழ்வு, மன்னிப்பு, எளிமை வாழ்வு, நீதி நேர்மை, பகிர்ந்து வாழ்தல் போன்ற இறை அரசின் இலட்சணங்களை என்னில் குடும்பத்தில் சமுதாயத்தில் வளர்க்க உதவுகிறார்.

***செபம்:***

அன்பான பிதாவே! உமது ஆவியானவரை அனுப்பி என்னை விடுதலையாக்கும். அன்பு செய்ய, மன்னித்து மறக்க, நோயிலிருந்து விடுதலைபெற எனக்கு உதவியருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 26. தூய ஆவியானவர் தரும் விடுதலை

**"ஆண்டவருடைய ஆவி என்மேலே, ஏனெனில் என்னை அபிசேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர். குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்"** (புனித லூக்கா 4:18-19)

ஆன்மிக விடுதலை மட்டுமல்ல முழுவாழ்விலும் விடுதலையளிக்க இயேசு இவ்வுலகிற்கு வந்தார். உடல் நோய், ஆன்ம நோய், சமூக அநீதி போன்றவற்றில் விடுதலை தர அவர்வந்தார். அருள்தரும் ஆண்டு என்பது ஜுபிலி ஆண்டாகும். அப்போது கடன் மற்றும் பல கட்டுக்களில் இருந்து மக்கள் விடுதலை பெறுவர்.

**இன்று குடும்பத்தில், சங்கத்தில், பங்கில், சமுதாயத்தில் அவர் செய்த பணியைத் தொடர்ந்து செய்ய எம்மை விடுதலையாக்குகிறார். தூய ஆவியானவர் அன்பை அடித்தளமாகக் கொண்டு இதைச் செய்ய எம்மை அபிசேகம் செய்துள்ளார்.**

உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து சமநிலைப்படுத்தும் செயலைச் செய்ய எம்மை அழைக்கின்றார். (2கொரி 8:9-14) (அப். பணி 2:44-45), அப். பணி 4: 34-35), யாகப்பர் 2:15-17)

நாம் தூய ஆவியால் நிரம்பப் பெற்றிருந்தால் எமது செல்வங்கள், வரங்கள், நேரம், பொருளாதாரம், அன்பைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

எனக்காக மட்டும் வாழ, எனது தனிப்பட்ட விடுதலைக்காக மட்டும் தூய ஆவியானவர் என்னை விடுதலையாக்க வில்லை. எனது குடும்பத்தில் மற்றவர்களின் விடுதலைக்காக நான் என்னை மாற்ற வேண்டும். சமுதாய விடுதலைக்காக என்னை மாற்ற வேண்டும்.

இன்று மற்றவர்களை மாற்றுவதிலேயே அதிக கவனம் செலுத்துகிறோம். ஆனால் முதிர்ச்சி அடைந்த ஒருவர் மற்றவரால் ஏற்படும் துன்பத்தைத் தாங்கிக்கொண்டு, மற்றவர் மாறுவதற்காகத் தன்னை மாற்ற முயலுவார்.

*செபம்:*

அன்பான பிதாவே! மற்றவர் மாறுவதற்காக என்னை மாற்றியருளும். குடும்பத்தில், சங்கத்தில், பங்கில் மற்றவர்களின் பெலவீனத்தில் வரும் துன்பங்களைச் சகித்துக் கொள்ள வரந்தாரும். மற்றவர்களது தவறுகளை அன்போடு சுட்டிக்காட்ட வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 27. தூய ஆவியானவரும் ஒருமைப்பாடும்

பாபேல் போபுரத்தில் நடந்த நிகழ்வு மூலம் மக்கள் சிதறடிக்கப்பட்டனர். ஆனால் தூய ஆவியானவர் பெந்தக்கோஸ்தே நாளில் இனம், மதம், மொழி பேதங்களைத்தாண்டி எல்லா மக்களையும் ஒன்று சேர்த்து ஒற்றுமையை நிலைநாட்டினார். மறைந்த ஒற்றுமையை மலர்ச்சியடையச் செய்தார்.

இன்று நாடுகளில் வேற்றுமைகளை ஒழித்து ஒரு மொழி, ஒரு இனம் என்ற நிலை இருப்பின் ஒற்றுமை நிலவும் என்ற தவறான கருத்து நிலவுகிறது. அப். நட 2:1-13. ஒவ்வொரு இனமக்களும் தத்தம் மொழிகளிலேயே பேசக்கேட்டனர். தூய ஆவியானவர் ஒருமொழி ஒரு இனமாக்கவில்லை. வேற்றுமைக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தினார்.

நாம் தூய ஆவியானவரின் ஆலயம் (1கொரி 3:16-17, 1கொரி 6:19-20) அதுமட்டுமல்ல நாம் பெற்றுக்கொண்ட அழைப்பு வேறுபட்டாலும் வேற்றுமையில் ஒற்றுமையாக வாழ அழைக்கின்றார்.

**"நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்புக்கேற்ப வாழ்க்கை நடத்துங்கள். நிறைவான தாழ்ச்சியும், சாந்தமும், பொறுமையும் உள்ளவர்களாய் நடந்து, அன்பினால் ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளுங்கள். தேவ ஆவி அளிக்கும் ஒருமைப்பாட்டைச் சமாதானம் என்னும் பிணைப்பால் காப்பாற்றக் கண்ணும் கருத்துமாய் இருங்கள்...."** (எபேசி 4:1-5)

நாம் தூய ஆவியில் புதுப்பிறப்புப் பெறுகிறோம். அப்போது எம்மிடையே உள்ள வேறுபாடுகள் எம்மை அழகுபடுத்தவும், அவை எம்மைப் பிரிக்காது ஒன்று சேர்க்கவும் தூய ஆவி உதவுகிறார். (கொலோசி 3:9-11)

சில குடும்பங்களில் ஆண் பெண் வேறுபாடு இருக்கக்கூடாது. இருவரும் ஒருவராகச் செயற்படவேண்டும். அதனால் ஒரே சுபாவத்தில் வாழ வேண்டும் என்பர். இது தவறாகும். ஆண், பெண் சுபாவம் இறைவன் எமக்குத் தந்ததே. இது கணவன் மனைவியை ஆண் பெண் சுபாவத்தில் மாற்றாது நீ நீயாக இரு. நான் நானாக இருக்கிறேன். இருவருக்கும் இடையில் இடைவெளி தேவை. இந்த வேற்றுமைக்குள் ஒற்றுமையாக இருப்போம் என்பதே ஆவியின் அழைப்பு. இதுவே வெவ்வேறு இனங்கள், மொழி பேசுவோர் வாழும் நாட்டுக்கு பொருந்தும். வேற்றுமைக்குள் ஒற்றுமையாக வாழப் பழக வேண்டும். (எபேசி 2:14-22)

*செபம்:*

அன்பான பிதாவே! உமது ஆவியானவரின் உதவியோடு வேறுபாடுகளை மதித்து வேற்றுமைக்குள் ஒற்றுமையாக வாழ வரந்தாரும். இறை ஆவியில் நாம் எல்லோரும் சகோதரர்கள். உயர்வு தாழ்வு பாராட்டாது ஒரே சரீரமாக வாழ வரந்தாரும். எமக்குள் இருக்கும் பிளவுகளை எடுத்துவிடும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 28. பொறுப்பும் சுதந்திரமும்

இறைவன் எமக்குத் தந்த பரிசு சுதந்திரம். அதோடு எமக்குப் பொறுப்பும் தந்துள்ளார். இந்த உலகை முழுமையாக்கும் பொறுப்பாகும். இறைவனது காரியத்தை, அன்பு செய்யும் காரியத்தைச் செய்யுமாறு எமக்குப் பொறுப்புத்தந்துள்ளார். இதை நாம் மற்றவர்களோடு சமமாகப் பங்கிட வேண்டும்.

சுதந்திரம் எமக்குண்டு. ஆனால் அதை எமது சுயநலத்துக்காகப் பயன்படுத்தும்போது அது மற்றவருக்குத் துன்பத்தை ஏற்படுத்துகிறது. அதே நேரம் பொறுப்பிருந்தும் சுதந்திரம் இல்லையேல் இறைவன் எதிர்பார்க்கும் விதத்தில் வாழமுடியாது போகிறது.

எமது குடும்பங்களில் எமது பிள்ளைகளுக்கு பொறுப்பும் சுதந்திரமும் சமமாகக் கொடுக்கிறோமா? பிள்ளையைச் சமைக்குமாறு பொறுப்புக் கொடுக்கிறோம். ஆனால் சுதந்திரம் கொடுப்பதில்லை. நாமே சமையலறைக்குச் சென்று செய்து கொடுக்கிறோம். காரணம் பிள்ளை சமைத்தால் என்னைப் போன்று நன்றாகச் சமைக்காது என எண்ணுகிறோம். அதே நேரம் பிள்ளை எண்ணுகிறது, எனக்குப் பொறுப்பை மட்டும்தான் தந்தார்கள். அப்பொறுப்பைச் செய்யச்சுதந்திரம் தரவில்லையே என்று கூறக்கூடும். சில இடங்களில் சுதந்திரம் கொடுக்கிறார்கள். ஆனால் பொறுப்புக் கொடுப்பதில்லை. இரண்டையும் எமது பிள்ளைகளின் வயது, அனுபவத்துக்கேற்ப சமமாகக் கொடுத்தாலே அப்பிள்ளைகள் மனமுதிர்ச்சி பெறுகின்றனர். இல்லையேல் எப்போதும் எம்மில் தங்கிவாழும் பிள்ளைகளாகவே வாழ்வர்.

எமக்குக் கீழுள்ளவர்கள் வளர்வதற்கு நாம் உதவுகிறோமா? அல்லது அவர்களை வளரவிடுவது எப்படி என்பதை அறியாமல் இருக்கிறோமா? தூய ஆவியானவர் எமக்கு வல்லமை தருகிறார். எல்லாவற்றையும் நாமே செய்து மற்றவர்களை எம்மில் கதங்கவைக்காது வாழப்பழகவேண்டும்.

தூய ஆவியானவர் எம்மை விடுதலையாக்குகிறார். (புனித லூக்கா 4:18-19) அவர் தரும் விடுதலை மூலம் மற்றவர்கள் இறையரசில் வளர எமக்கு இடமளிக்கும் உள்ளத்தைத் தருகிறார்.

இதைச் செய்ய இறைவன் வல்லமை தருகிறார்.

**"எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு' 'கிறிஸ்துவின் முழுப்பருவத்தின் அளவை அடைந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாவோம்"** (எபேசி 4:13)

*செபம்:*

அன்பான பிதாவே, கிறிஸ்துவின் முதிர்ச்சிக்கு வர உதவியருளும். நீர் எமக்குத் தந்த பொறுப்பையும் சுதந்திரத்தையும் சமமாகப் பாவிக்க வரந்தாரும். மற்றவர்களுக்கு பொறுப்பையும் சுதந்திரத்தையும் கொடுத்து மற்றவர்களுக்கு முதிர்ச்சியின் அனுபவத்துக்கு வர இடமளிக்கும் இதயத்தைத் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 29. தூய ஆவியானவரும் அருட்சாதனங்களும்

அருட்சாதனங்கள் மூலம் தூய ஆவியானவர் எம்மில் செயற்படுகிறார். இறைவனின் அன்பை அனுபவிக்க உதவுகிறார்.

திருமுழுக்கு, ஒப்புரவு அருட்சாதனம், நற்கருணை, உறுதிப்பூசுதல் திருமணம், குருத்துவம், நோயில்பூசுதல் மூலம் விசேடவிதமாக இறைவனின் அன்பை அனுபவிக்க தூய ஆவியானவர் உதவுகிறார்

இயேசுநாதர் திருமுழுக்கின்போது தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டார். இறைவனை அப்பா என்ற அனுபவத்தைப் பெற்று அதை வெளிப்படையாக அறிக்கையிட்டார். அதேபோன்று இயேசு தனது அன்பார்ந்த மகன் என்பதை இறைவன் உலகிற்குச் சாட்சி கூறினார்.

இயேசுநாதர் தம்மையே பிதாவுக்கு அர்ப்பணித்தார். அதேபோன்று தம்மைப் பிறர் பணிக்கும் அர்ப்பணித்தார். இயேசுநாதரின் அர்ப்பண வாழ்வின் தொடர்ச்சியே அருட்சாதனங்கள் மூலம் எமக்கும் கிடைக்கிறது.

இதில் பொதுநிலையினர் திருமணம் என்ற திருவருட்சாதனத்தை விசேடமாகப் பெறுகிறோம். கணவன் மனைவி என்ற உறவு திருமணத்தன்று உடலுறவின்போது உறுதிபெறுகின்றது. திருமணம் என்ற திருவருட்சாதனத்தை இருவரும் அன்றாடம் அனுபவிக்கமுடியும். உடலுறவில் மட்டுமல்ல ஒருவர் ஒருவருக்கு சிறுசிறு உதவி செய்யும்பொழுதும், ஒருவருக்கு ஒருவர் செவிசாய்க்கும்பொழுதும், புரிந்துகொண்டு அன்பு செய்யும்பொழுதும், ஒருவரது பெலவீனத்தில் ஒருவரை ஒருவர் தாங்கும்பொழுதும் இறை அன்பை அனுபவிக்கிறோம். இந்த அன்பு சரீர, மன, ஆன்மிக ரீதியில் பகிரப்படுகின்றது. இதன்வெளிப்பாடாக குழந்தை பிறக்கின்றது. அப்பிள்ளைகளை அன்போடும் இறைபக்தியோடும் நல்ல பிள்ளைகளாக வளர்க்கும் பொறுப்பு இருவருக்கும் கிடைக்கின்றது. அவர்களுக்கு சரீர, மன, அறிவு, ஆன்மிக வளர்ச்சி பெற இருவரும் செய்யும் அர்ப்பணம், பரித்தியாகத்தில் பிள்ளைகள் இந்த அன்பை அனுபவிக்கின்றனர். ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு, மன்னித்து மறந்து அன்பு செய்யும்போது இறை அன்பை அனுபவிக்கிறோம்.

எமது குடும்பத்தில் தூய ஆவியானவரின் உதவியோடு இறை அன்பில் உளந்திறக்கிறோமா? இறை அன்பை நாம் அனுபவித்து அந்த அன்பால் மற்றவர்களை அன்பு செய்கிறோமா? மனித அன்பு மாறக்கூடியது, சுயநலமுள்ளது, எதிர்பார்ப்புள்ளது. இறைவனது மாறாத அன்பை அனுபவித்தால் அந்த அன்பால் அன்பு செய்ய முடிகிறது.

*செபம்:*

அன்பான பிதாவே, உமது அன்பை அனுபவிக்க வரந்தாரும். உமது அன்பால் அன்பு செய்ய வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 30. நாம் வலுவற்ற நிலையில் ஆவியானவர் எமக்குத் துணைநிற்கிறார்.

**"நம்வலுவற்ற நிலையில் நமக்கு ஆவியானவர் துணை நிற்கிறார். ஏனெனில் செபிக்கவேண்டிய முறையில் செபிப்பதெப்படியென நாம் அறியோம். ஆவியானவர்தாமே சொல்லொணாப் பெருமூச்சுகளோடு பரிந்து பேசிச் செபிக்கிறார். உள்ளங்களை ஊடுருவிக் காண்கிற இறைவன் ஆவியானவரின் கருத்தை அறிவார். ஆவியானவர் இறைமக்களுக்காகக் கடவுளுக்கேற்பப் பரிந்து பேசுகிறார் என்பதை இறவைன் அறிவார். கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு ஆவியானவர் அவர்கள் நன்மைக்காக அனைத்திலும் ஒத்துழைக்கிறார்"** (உரோமர் 8:26-28)

தலவில் ஆலயத்துக்கு எனது நண்பர்களுடன் சேர்ந்து எனது குடும்பத்தினரும் சென்றோம். இடைவழியில் நாம் சென்ற வாகனம் மூன்றுமுறை புரண்டது. அதில் சென்றவர்கள் சிறு சிறு காயங்களுடன் தப்பினார்கள். எனது நண்பன் அதில் இறந்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் என்னசெய்வது என்று ஒன்றும் தெரியவில்லை. சோர்வும், கவலையும் வாட்டியது. அன்று இந்த வாசகம் எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

1. **இறைவனுக்கு இது தெரியும்**
2. **இதனூடாக இறைவன் எம்மை அன்பு செய்கிறார்**
3. **இதனை நன்மையாக மாற்றுவார்**
4. **அவரது நேரம்வரும்வரை காத்திருப்பேன்**
5. **அதுவரை அவருக்கு நன்றி கூறுவேன்.**

இப்படிப்பட்ட விசுவாசப்படி நிலைகளை விசுவசித்தாலும் சோர்வு என்னை வாட்டியது. இச்சோர்வுக்குள் தூய ஆவியானவர் எனக்காகப் பரிந்து பேசுகிறார் என்ற உண்மை எனக்கு ஆறுதலைத்தந்தது.

உங்களது வாழ்விலும் சில சந்தர்ப்பங்களில் ஆழமான சோர்வு, வேதனையை அனுபவிக்கிறீர்களா? அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆவியானவர் எமக்குத் துணைநிற்கிறார் என்பதை விசுவசிப்போம்.

*செபம்:*

அன்பான பிதாவே, தூய ஆவியானவர் எனது வலுவற்ற நிலையில் எனக்குத் துணைநிற்கிறார் என்பதை விசுவசிக்க வரந்தாரும். அவர் எனக்குள் இருந்து எனக்காகப் பரிந்து பேசுபவற்றிற்குச் செவிசாய்த்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 31. குறிக்கோளில் பயணம் செய்ய ஆவியானவர் எமக்கு உதவுகிறார்.

**“வேதனைகள், நெருக்கடி, இடுக்கண், சாட்டையடிகள், சிறைவாழ்வு, குழப்பங்கள், அயரா உழைப்பு, கண்விழிப்பு, பட்டினி இவற்றையெல்லாம் மிகுந்த மன உறுதியோடு ஏற்றுக்கொண்டு, புனிதம், அறிவு, பொறுமை, பரிவு பரிசுத்த ஆவிக்குரிய செயல்கள், களங்கமில்லா அன்பு இவற்றைக் கடைப்பிடித்து, உண்மையே பேசி, கடவுளின் வல்லமையைப் பெற்றுக்கொண்டு இறைவனுக்கு ஏற்புடைய வாழ்வைச் சார்ந்த படைக்கலன்களை வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் தாங்கி, மேன்மையிலும், இழிவிலும் தூற்றப்படினும், போற்றப்படினும் அனைத்திலும் நாங்கள் கடவுளின் பணியாளரென்றே நடத்தையில் காட்டுகிறோம்”** (2கொரி 6:4-8)

புனித சின்னப்பர் இந்த அனுபவத்துக்கு வர தூய ஆவியானவர் அவருக்கு உதவி செய்தார். குறிக்கோளுக்காகத் துன்பத்தையும் தாங்க மன உறுதியைக் கொடுக்கிறார். மனச்சோர்வை அகற்றுகிறார்.

**“கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவன் எவன்? வேதனையோ? நெருக்கடியோ? கலாபனையோ? பசியோ? ஆடையின்மையோ? இடர்களோ? வாளோ? எதுதான் நம்மைப் பிரிக்கமுடியும்?.....”**(உரோமர் 8:35-39)

**எமது வாழ்வில் இறையரசைக் கட்டுவதே எமது குளிக்கோள். இறை அன்பை இறை நீதி, மன்னிப்பு, சமத்துவத்தை வெளிப்படுத்துவதே. இறைவனது விருப்பப்படி வாழ்வதே இறைவனது மகனாக, மகளாக வாழ்வதே எமதுஇறுதிக் குறிக்கோள். இதற்காக பலதுன்பங்களை அனுபவக்க நேரிடும். இக்குறிக்கோளில் எனது குடும்பத்தினரை வாழ வைக்கப் பல கஷ்டங்களைப் படவேண்டியுள்ளது. அதற்குத்தூய ஆவியானவர் மன உறுதியையும் ஞானத்தையும் தருகிறார்.**

நாம் அன்றாட வாழ்வில் இந்த உயர்ந்த குறிக்கோளில் வாழ்கிறோமா? அல்லது சிறு சிறு குறிக்கோளில் வாழ்கிறோமா? தூய ஆவியானவர் குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்ய எம்மைத் தூண்டுகிறார்.

***செபம்:***

அன்பான பிதாவே! இறையரசைக் கட்டி உமது அன்பை வெளிப்படுத்த முடியாமல் கஷ்டப்படுகிறேன். அன்றாடம் பல பிரச்சினைகள் வந்து குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்ய தடுக்கின்றது. ஆவியின் வல்லமையால் குறிக்கோளின்படி வாழவும் அப்படி வாழும்பொழுது வரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவும். வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 32. உங்களுடைய உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம்

**"உங்களுடைய உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் அந்த ஆவியைக் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்டீர்கள். ஆகவே நீங்கள் உங்களுக்குச் சொந்தமல்ல. ஏனெனில் நீங்கள் விலைகொடுத்து வாங்கப்பெற்றீர்கள். ஆகவே, உங்கள் உடலில் கடவுளை மகிமைப்படுத்துங்கள்"** (1கொரி 6:19-20)

நான் எனக்குச் சொந்தமல்ல. எனது கணவன், எனது மனைவி எனது பெற்றோர், எனது பிள்ளைகள் எனக்குச் சொந்தமல்ல. எனது சொத்துக்கள் கூட இறைவனுக்கே சொந்தமானது.

எமது குடும்பத்தில் யாராவது ஒருவர் இறந்தால் இறைவா எதற்காக அவரை எடுத்தாய் என்று கேட்கிறோம். இவ்வளவு நாட்களும் எம்மோடு வாழ்வதற்குத் தந்த சந்தர்ப்பத்துக்காக நன்றி என்றே கூறவேண்டும். உரியவர் உரியதை உரிய நேரத்தில் எடுப்பதற்கு உரிமையுண்டு.

நாம் தூய ஆவியின் ஆலயமாக இருப்பதால், மற்றவர்களும் தூய ஆவியின் ஆலயமே. சமைக்கும்பொழுதும், குளிக்கும்பொழுதும், சேவை செய்யும் பொழுதும் இது ஞாபகம் வருகின்றதா?

தேனீர் கோப்பையைக் கொடுக்கும்போது உடலைக்கழுவும்போது தூய ஆவியின் ஆலயத்தைக் கழுவுகிறேன் என்ற உணர்வோடு செய்கிறேனா? மற்றவர்கள் தூய ஆவியின் ஆலயமாக இருப்பதால் மற்றவர்களை மதிக்கவேண்டும். அன்பு செய்யவேண்டும், பாராட்ட வேண்டும், மன்னிக்க வேண்டும், பகிர்ந்துவாழ வேண்டும். ஏற்றுக்கொள்ளவேண்டும். இது எமது அன்றாட வாழ்வின் நிகழ்ச்சிகளில் ஞாபகம் வருகின்றதா? எமது பிள்ளைகளுக்கும் இந்த எண்ணத்தை, இந்த உண்மையைக் கூறுகிறேனா?

*செபம்:*

அன்பான பிதாவே! நான் தூய ஆவியின் ஆலயம். மற்றவர்களும் தூய ஆவியின் ஆலயம் என்பதை எண்ணி வாழ வரந்தாரும். நான் அசுத்த ஆவியின் ஆலயமாக மாறாமல் இருக்க வல்லமைதாரும். மற்றவர்களையும் அசுத்த ஆவியின் ஆலயமாக ஆக்காமல் வாழ வரந்தாரும்இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 33. நிறை உண்மை

**“உண்மையின் ஆவியானவர் வந்தபின், நிறை உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்”** (புனித அருள 16:13)

இன்று எது சரி? எது பிழை? என்று தெரியாமல் வாழ்கிறோம். உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும் விளம்பரங்கள் மூலம் எம்மை ஏமாற்றுகின்றனர். தொடர்பு சாதனங்கள்மூலம் நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை உண்மைக்குப் புறம்பாக்குகின்றனர். நாமும் இவற்றுக்கு ஏமாறுகிறோம்.

தூய ஆவியானவர் எம்மை நிறை உண்மையை நோக்கி வழிநடத்துகிறார். ஆண்டவரின் வார்த்தையே உண்மை. அவர்காட்டிய பாதையில் சென்றால் உண்மையான நிம்மதி, சந்தோசத்தை அடையமுடியும்.

இன்று எமக்கு உண்மையான சந்தோசம், சமாதானம், நிம்மதி கிடைக்கின்றதா? எமக்கு ஏன் உள்ளத்தில் நிம்மதியில்லை. விடுதலையில்லை. உள்ளத்தில் சத்தம் அதிகரிப்பதால் வெளி ஆடம்பரங்களால் எம்மை நிரப்பப் பார்க்கிறோம். ஆனால் ஆழமான வெறுமையில் இறை அமைதியைக் காணலாம். மரியாளின் வாழ்வில் தூய ஆவிக்கு முழுமையாக இடமளித்தாள். தூய ஆவியானவர் நிறை உண்மையை நோக்கி அவளை வழிநடத்தினார். துன்பம், மகிழ்ச்சி, கஷ்டங்களினூடாகச் செல்லத் தூய ஆவியானவர் உதவினார்,

எமது வாழ்வில் மரியாளைப்போன்று வெறுமையாகி தூய ஆவியில் நிரம்ப ஆசைப்படுவோம். தூய ஆவியானவர் எமது வாழ்வில் செல்லவேண்டிய பாதையைக் காட்டுவார்.

இன்று தூய ஆவியின் வழிநடத்துதலுக்கு அகப்படாததால் கணவன் மனைவி, பிள்ளைகள் பெற்றோருக்கிடையில் ஒற்றுமையின்மையைக் காண்கிறோம். ஆடம்பரமான வாழ்வுக்கு அகப்பட்டு பணத்தை வீணடிப்பதைக் காண்கிறோம்.

*செபம்:*

அன்பான பிதாவே! உண்மையின் ஆவியானவரைப் பெற்று உண்மையான வாழ்வு , அர்த்தமுள்ள வாழ்வு, எளிமையான வாழ்வு. அன்பின் வாழ்வு வாழ வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 34. எமது ஆவியும் பரிசுத்த ஆவியும்.

**"மனிதன் உள்ளத்தில் இருப்பதை மனிதனுக்குள் இருக்கும் அவன் ஆவியேயன்றி வேறு எவரும் அறியார். அவ்வாறே கடவுளின் உள்ளத்தில் இருப்பதைக் கடவுளின் ஆவியேயன்றி வேறெவரும் அறியார்"** (1கொரி 2:11)

மேலும் கலா 6:18, எபே 4:23, பிலிப்பி 4:23, 2தீமோ 4:22, போன்ற குறிப்0பு-களில் கடவுளின் ஆவிக்கும் மனித ஆவிக்குமுள்ள தொடர்பு காணப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் இதுபற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

**மனிதனுடைய ஆவி உண்டாக்கப்பட்ட ஆவி. அந்த ஆவி கடவுளைச் சார்ந்து நிற்கிறது. கடவுள் மனிதனிலுள்ள ஆவியைத் தமக்காகவே படைத்தார். ஆகவே அந்த ஆவி கடவுளையே நாடவேண்டும். ஆனால் அது தனக்குக் கடவுள் கொடுத்திருக்கும் சுயாதீனத்தைப் பயன்படுத்தி, சில சமயங்களில் கடவுளைத் தேடுவதில்லை. அது கடவுளை விட்டுத் தூரமாய்ச் சென்று விடுகிறது.**

**"நீர் எங்களை உமக்கென்று உண்டாக்கினீர், எங்கள் உள்ளம் உம்மில் வந்து அமையும்ரை எங்கள் உள்ளத்துக்கு நிம்மதியில்லை"** என புனித அகுஸ்தீனார் கூறுகிறார்.

மனிதனின் ஆவி கடவுளின் ஆவியோடு உறவாடமுடியாத நிலையில் உள்ளது. ஆகவே அதை உயிப்பிக்கவும், ஊக்குவிக்கவும் கடவுள் தம்முடைய ஆவியை மனிதனுக்குக் கொடையாக அருளினார். அந்த ஆவியின் உதவியால் தான் அவன் தமக்கென்று தன்னை உண்டாக்கிய கடவுள் ஒருவர் உண்டென்பதையும், தான் அவருக்குரியவன் என்பதையும் தன்னுடைய ஆவியில் உணர்ந்து கொள்கிறவன் இந்த உணர்ச்சி, தாகம் ஏற்படும் போது மனிதன் தன்னை அறியாமலே கடவுளின் சத்தியத்தையும், சகல பேரின்பத்தையும் நாடுகிறான். இதற்கு இறைவனின் ஆவி உதவுகிறது. **"அவர் நம்முள் நிலைத்திருந்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய ஆவியால் அறிகிறோம்"** (1யோவா 3:24) 1கொா: 2:1, உரோமர் 8:16

பாவத்தால் பாழடைந்திருக்கும் மனித ஆவிக்குத் தூய ஆவியானவர் புத்துயிர் அளிக்கிறார்.

*செபம்:*

அன்பான பிதாவே, உமது ஆவியை நாட எனது ஆவியில் தாகத்தை ஏற்படுத்தும். உம்மோடு கலக்க, உம்மை அறிய, உம்மை அன்பு செய்ய எனது ஆவியில் துடிப்பை ஏற்படுத்தும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 35. ஆவியினால் பிறத்தல் அல்லது மறுவாழ்வு

நிக்கோதேமு இயேசுநாதரிடம் வந்து உரையாடுகையில் மறுபடியும் பிறக்க வேண்டியதன் ஆவசியத்தைக் கூறினார். அதாவது ஆவியினால் பிறப்பதன் அவசியத்தைக் கூறினார்.

ஆவியினால் பிறத்தல் என்றால் என்ன? **"மறுபடியும் ஜனிப்பித்தல்" 'மறுபடியும் பிறத்தல்'** என்றும் கருத்து புதிய ஏற்பாட்டில் கூறப்படுகிறது. அவர் தமது இரக்கத்தினாலே மறுபடியும் ஜனிப்பிக்கிறார் என்று இராயப்பர் கூறுகிறார். (1இராய 1:3) மேலும் சின்னப்பரும் கூறுகிறார். தீத்து 3:5, கலாத்தி 6:15 (2கொரி 5:17)

**'மறுபடியும் பிறத்தலும்', 'புதிதாய் சிருஷ்டித்தலும்'** கிறிஸ்தவர்கள் பெறும் இரட்சிப்பையும் அடையும் மீட்பையும் குறிக்கின்றன. மனிதனைப் புதுப்பித்து புது படைப்பாக்குபவர் தூய ஆவியானவரே.

பரிசுத்த ஆவியானவர் பாவியை மனந்திரும்புதலுக்குத் தூண்டுகிறார். இயல்பாக பாவங்களினால் இறந்தவர்கள். பரிசுத்த ஆவியின் துணையின்றி கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் தொடங்க இயலாது. (எபே 2:1, உரோமர் 8:6)

மறுபடியும் பிறத்தல் ஆவியானவரின் செயலாகும். கிறிஸ்தவ வாழ்வு ஆவியில் தொடங்குகின்றது. (கலாத் 3:3)

இன்று எமது குடும்பங்களில் நாம் ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு உட்பட்ட மக்களாக வாழ்கிறோமா? ஆவியில் புதிதாகப் பிறந்தவர்களாகச் செயற்படுகிறோமா? அல்லது பாவத்திற்கு அகப்பட்டு அலைகிறோமா? தூய ஆவிக்குள் மறுபிறப்பைப் பெற வேண்டும். அப்போதுதான் உண்மையின் ஆவியின் வழிநடத்துதலுக்கு அகப்படுவோம்.

*செபம்:*

அன்பான பிதாவே! தூய ஆவியின் மூலம் மறுபிறப்பை அடிக்கடி அனுபவிக்கவரந்தாரும். பாவவாழ்வைவிட்டு உமது அன்பின் வாழ்வை வாழ எனது ஆவியில் தாகத்தை ஏற்படுத்தும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 36. ஆவியினால் நிறைந்திருங்கள்

புதிய ஏற்பாட்டில் பலர் ஆவியினால் நிறைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. எலிசபெத்து (புனித லூக்கா 1:41), சகரியா (புனித லூக்கா 1:67), இராயப்பர் (அப். நட 4:8), ஸ்தேவன் (அப். நட 6:5) சின்னப்பர் அப்.பணி 9:17), பர்னபா (அப். பணி 11:24). இவர்களைத் தவிர ஊழியத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு பேரும், சீடர் அனைவரும் பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. (அப். பணி 6:3, 13:52).

அப்போஸ்தலர்கள் மட்டுமன்றி கிறிஸ்தவர்கள் அனைவருமே ஆவியால் நிறைந்திருக்க முடியும். **'ஆவியால் நிறைந்திருங்கள்'** (எபே 5:18)

தூய ஆவியினால் எல்லோரையும் நிறைந்திருக்கப்பண்ணுவது இறைவனின் விருப்பம். நீரினால் ஞானஸ்நானம் பெற்றாலும் ஆவியின் நிறைவைப் பெற வேண்டியது அவசியம். அப். பணி 11:16ல் ஆவியைப் பெற்றவர்கள் அயல்மொழிகளில் பேசினார்கள் என உள்ளது. நாம் ஆவியைப் பெற்றதும் அயல்மொழிகளில் பேச வேண்டுமென்பது முக்கியமல்ல. ஆவியின் நிறைவைப் பெறுவது முக்கியம்.

இறைவன் தம்முடைய ஆவியைக் கொடையாக அளிக்கிறார். அதை யார் யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களிடத்தில் மட்டும் பரிசுத்த ஆவி வாசம் செய்கிறார். பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டோம் என்று இருந்துவிடாமல் அடிக்கடி அவர் எம்மை நிரப்பவேண்டுமெனச் செபிக்க வேண்டும். பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கும் மக்களுடைய உள்ளத்தில் உலகந்தர இயலாத உன்னத சமாதானம் நிறைந்திருக்கும். அவர்கள் வாழ்க்கையில் ஆவியின் கனிகள் காணப்படும் **"ஆவியின்கனியோ அன்பு, சந்தோசம், சமாதானம், நீடிய பொறுமை, தயாளம், நற்குணம், உண்மை, சாந்தம், இச்சையடக்கம்"** (கலா 5:22-23)

எமது வீட்டில், வீதியில், காரியாலயத்தில் நாம் வாழும் வாழ்வில் ஆவியின் கனிகள் மற்றவர்களுக்கு எம்மூலம் தெரிகிறதா? அல்லது மாமிசத்தின் கிரியைகள் தெரிகிறதா?

நாள்தோறும் செபிப்போம். இறைவனிடம் கேட்போம். ஆவியானவரே நிரந்திரமும் உம்மிலே நிரம்பி வாழ உதவும் என்று செபிப்போம்.

*செபம்:*

**அன்பான பிதாவே! ஆவியில் நிரம்ப என்னை வெறுமையாக்க வரந்தாரும். எந்நேரமும் எனது எண்ணங்களை உம்மில் பதிக்க வரந்தாரும். உமது ஆவியின் கனிகளை எந்நேரமும் அனுபவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.**

# 37. குடும்ப வாழ்க்கை

**"மனைவியரே, உங்கள் கணவருக்குப் பணிந்து நடங்கள். இதுவே ஆண்டவருக்குள் வாழும்முறை. கணவர்களே உங்கள் மனைவியருக்கு அன்பு காட்டுங்கள். அவர்கள் மேல் எரிந்து விழாதீர்கள். பிள்ளைகளே எல்லாவற்றிலும் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருங்கள். இதுவே ஆண்டவருக்கு உகந்தது. தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு எரிச்சல் மூட்டவேண்டாம். அவர்கள் மனந்தளர்ந்து போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்"** (கொலோ 3:18-21)

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு முக்கியம். இந்த உறவு உடைந்தால் அது பிள்ளைகளிலும் வெளிப்படும். ஆகவே முதலில் இருவரது உறவையும் கட்டியெழுப்ப முயற்சி செய்யவேண்டும். ஆசைப்படவேண்டும். அதற்கு இருவரும் இறைவனோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும்.

இருவரும் ஒருவரது பெலவீனம் குறைபாடுகளைப் பார்த்தவாறு பயணம் செய்யாது இறைவனைப் பார்த்தவாறு பயணம் செய்ய வேண்டும். அப்பொழுது மற்றவரது பெலவீனத்துக்குப் பதிலாக நல்ல செயல்கள் தெரியத்தொடங்கும்.

இன்று சிறிய கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் அதிகரித்து வருகின்றது. தம்பதிகள் சுதந்திரத்தையே அதிகம் விரும்புகின்றனர். ஆனால் இறை அன்பை அனுபவிப்போர் மற்றவரிடமிருந்து சுதந்திரத்தை எதிர்பார்க்காது சுதந்திரத்தைக் கொடுப்போராக மாறுவார்கள். அதுமட்டுமல்ல மற்றவரது பெலவீனத்தைத் தாங்கிக்கொண்டு அவர்களை அன்பு செய்வார்கள்.

**தூய ஆவியில் நிரம்பிய இருவரது வாழ்விலும் தூய ஆவியின் கனிகள் வெளிப்படும். அது பிள்ளைகளிலும் வெளிப்படத்தொடங்கும். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவர். ஒருவர் ஒருவரை பாராட்டுவர், மதிப்பர், அன்பு செய்வர், மன்னிப்பர். தான் சொல்வது தான் சரியென அழுங்குப்பிடியில் வாழாது விட்டுக்கொடுக்கக் கூடியவற்றிற்கு விட்டுக்கொடுத்து வாழவும் முயல்வர்.**

இன்று எமது குடும்பவாழ்வு சிதைந்து செல்கிறது. சக்தி குறைகிறது. பணம் தேடுவதற்கே அதிகம் கஷ்டப்படுகின்றனர். ஆனால் குடும்பத்தில் உறவை வளர்க்க அதிகம் கஷ்டப்படுவதில்லை. இதனால் பிள்ளைகள் பாதிக்கப்படுகின்றனர். வயது முதிர்ந்த பெற்றோர் பாதிக்கப்படுகின்றனர். ஆவியில் நிரம்பி இருவரும் முதிர்ச்சியடையவில்லையேல் குடும்ப வாழ்வு சீர்குலைகிறது.

*செபம்:*

அன்பான பிதாவே! நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கேற்ப உமது ஆவியில் நிரம்பி வாழ வரந்தாரும். உம்முடன் நல்ல உறவை ஏற்படுத்தவும் குடும்பத்திற்கு நல்ல உறவை ஏற்படுத்தவும் வரந்தாரும். எமது குடும்பம் ஏனையகுடும்பங்களை அன்பு செய்து, சமுதாயத்தை அன்புசெய்து இறையரசைக் கட்டியெழுப்பும் குடும்பமாக மாற உதவியருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 38. ஆழம் ஆழத்தை அழைக்கிறது.

இறைவனின் ஆவி எனது ஆவியை ஈர்க்கிறது. அதேபோன்று எனது ஆவியும் இறைவனது ஆவியோடு தொடர்புகொள்ளத் துடிக்கிறது. ஆனால் எனது மனம் பாவத்தை நாடுகிறது. தாயின் வயிற்றிலிருந்த காலத்தி-லிருந்து இன்றுவரை எனது மனப்பதிவுகள் இருளைநோக்கி பாவத்தை நோக்கி, சுய நலத்தைநோக்கி இழுக்கின்றன. செயல்பட வைக்கின்றன. இதனால் எனக்குள்ளே ஆவியில் கலக்கம் வருகிறது. நிம்மதியில்லை. சோர்வு ஏற்படுகிறது.

**"நான் செய்வது என்னவென்று எனக்கே தெரியவில்லை, எதைச்செய்ய விரும்புகிறேனோ அதை நான் செய்வதில்லை. எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்"** (உரோம 7:15)

**"அதைச்செய்பவன் நானல்லேன். என்னில் குடிகொண்டிருக்கும் பாவமே அதைச் செய்கிறது என்பது தெளிவு"** (உரோம 7:20)

இந்த நிலை எம்மில் பலருக்கு வரக்கூடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வாழ்க்கை வெறுக்கிறது. எதிலும் பற்றில்லாத வெறுப்பு ஏற்படுகிறது. அதனால் மற்றவர்களை அன்பு செய்ய முடிவதில்லை. சிறியதவறும் பெரிதாகத் தெரிகிறது. எரிச்சல், கோபம் அதிகரிக்கிறது. உள்ளே இருக்கும் கலக்கத்தை மறைக்க மனம் எதையாவது செய்யத்துடிக்கிறது.

**"இறைவா, என் இறைவா, ஆர்வமுடன் உம்மை நாடுகிறேன்: நீரின்றி வறண்டு கிடக்கும் நிலம் நீரை நோக்கியிருப்பதுபோல் என் உள்ளம் உம்மீது வேட்கை கொண்டுள்ளது. என் உடலும் உம்மை ஆசிக்கின்றது"** (சங் 62:1)

**"ஆழம் ஆழத்தை அழைக்கிறது"** (சங் 41:7)

எமது வாழ்வில் இப்படிப்பட்ட அனுபவத்தில் இருக்கிறோமா? குடும்பப் பிரச்சினைகளாலும், பாவத்தாலும், வெவ்வேறு கஷ்டங்களாலும் ஆவி களைத்துப்போயுள்ளதா? **"கலைமான் நீரோடைகளை ஆர்வமுடன் நாடிச்செல்வதுபோல், இறைவா, என் நெஞ்சம் உம்மை ஆர்வத்துடன் நாடிச்செல்கிறது"** (சங் 41:1)

*செபம்:*

அன்பான பிதாவே! எனது ஆவி உம்மோடு உறவாடத் துடிக்கிறது. நான் சோர்ந்து களைத்துப்போயுள்ளேன். எனது புத்திக்கு எட்டாத உமது ஆவியின் உதவியை நாடி நிற்கிறேன். எனக்கு உதவிசெய்யும். உம்மால் முடியாதது ஒன்றுமேயில்லை. என்னை மீட்டு இரட்சித்தருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 39. விசுவாசம் என்னும் நன்கொடை

விசுவாசம் என்பது இறைவன் எமக்குத் தரும் நன்கொடையாகும். (எபேசி 2:8:) நாம் இறைவனுடன் ஒத்துழைக்காவிட்டால் விசுவாசத்தை இழக்கநேரிடும். **'உன் விசுவாசம் தவறாதபடி உனக்காக மன்றாடினேன்'** (புனித லூக்கா 22:32). அதேபோன்று புனித சின்னப்பர் விசுவாசத்தைப் பாதுகாத்ததாகக் கூறுகிறார். **'சீரிய தொரு பந்தயத்தில் ஓடினேன். ஓட்டத்-தை முடித்து விட்டேன். விசுவாசத்தைப் பாதுகாத்தேன்'** (2தீமோத்தேயு 4:7) விசுவாசத்தைப் பாதுகாக்க எமக்குப் பல சோதனைகள் வரக்கூடும். நாம் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டும். **"இறுதிக்காலத்தில் சிலர் தீய ஆவிகளின் வஞ்சனைகளுக்கும், பேய்களின் போதனைகளுக்குப் செவிமடுத்து விசுவாசத்தை மறுத்து விடுவர்"** (1தீமோத்தேயு 4:1)

எமது விசுவாசத்தைப் பாதுகாக்க நாம் செபிக்க வேண்டும். இறைவனது வார்த்தையைக் கேட்கும்போது எமக்கு விசுவாசம் உண்டாகின்றது. தபசு, ஒரு சந்தி, செபம் இவற்றின்வழியாக எமது விசுவாசம் கூடுகிறது.

புனித வின்சன்டிபோல் குருவாக இருக்கும் பொழுது அவருடைய விசுவா-சத்துக்கு எதிரான சோதனைகள் வந்தன. தனது வயதையொத்த மற்றவர்கள் பணத்திற்கும், பெயருக்கும், பெருமை புகழுக்காகவும் வாழும்போழுது நான் குருவாக இவ்வாறு வாழ்ந்து வீணாகக் காலத்தைக் கழிக்கிறேனே. இதைவிட்டு உலக இன்பங்களின் பின்னால் போகவேண்டு மென்று ஆசை ஏற்பட்டது. அவர் கண்ணீரோடு செபித்தார். **"இறைவா எனது விசுவாசத்தை மீண்டும் தரவேண்டும்"** என்று செபித்தாலும் விசுவாசத்திற்கு எதிரான சோதனைகள் வந்தவண்ணமே இருந்தன. சோத-னை வரும்போது அதைப்பிடித்துக்கொண்டு செபித்தார். பல மாதங்களின் பின்பே சோதனை மாறியது.

எமது வாழ்வில் விசுவாசத்துக்கு எதிரான சோதனைகள் வந்துள்ளனவா? நோய், பிரச்சினை, வந்து விசுவாசத்தைச் சோதிக்கினறனவா? அல்லது வல்லமை, சொத்து, காமம், புகழ் போன்றவை விசுவாசத்தைச் சோதிக்-கின்றனவா?

*செபம்:*

அன்பான பிதாவே! எனது விசுவாசத்தை அதிகமாக்கியருளும். உலகம், சரீரம், பசாசு பல ஆசைகளை, சவால்களைத் தந்து என்னைப் பெலவீன-மாக்குகின்றன. நான் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் வளர உதவி-யருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 40. துன்பம்

"நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதற்கு மட்டுமன்று அவருக்காகத் துன்பங்களை ஏற்பதற்கும் இறையருள் உங்களுக்கு அளிக்கப்பட்டது" (பிலிப்பி 1:29) குறிக்கோளுக்காகத் துன்பம் அனுபவிப்பது பெருமைப்பட வேண்டிய விடயம் என்று 2கொரி 6:4ல் புனித சின்னப்பர் கூறுகிறார்.

துன்பம் எல்லோருக்கும் உண்டு. "விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாய் அதை எதிர்த்து நில்லுங்கள். உலகமெங்குமுள்ள உங்கள் சகோதரர்களும் அதே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமன்றோ" (1இராய 5:9) நாம் எல்லோரும் துன்பத்தைக் கடந்து செல்லவேண்டும். "பக்தியோடு கிறிஸ்து இயேசுவில் வாழ விரும்புவோர் அனைவரும் துன்புறுத்தப்படுவர்" (2தீமோத் 3:12)

நன்மை செய்பவர்களுக்கும் துன்பம் வருகிறது. "நீதியின் பொருட்டுத் துன்புற்றாலும் நீங்கள் பேறுபெற்றவர்களே. மனிதர்களுக்கும் அஞ்சாதீர்கள். மனங்கலங்காதீர்கள்..." (1இராய 3:14) "தீமை செய்து துன்புறுவதைவிட, கடவுளுக்குச் சித்தமானால் நன்மை செய்து துன்புறுவதே மேல்" (1இராய 3:17)

தீமை செய்பவர்களுக்கும் துன்பம் வருகிறது. "பொல்லாதவர்களுக்குச் சமாதானம் ஒதுபோதும் இல்லை'(இசை 48:22) 'உன் அக்கிரமம் மிகப்பெரியது. உன் பாவங்கள் மோசமானவை. நீ நசிந்து போனதாய் ஏன் கூவுகிறாய்? உன் நோய் தீருவது இயலாத ஒன்று. ஏனெனில் உன் அக்கிரமம் மிகப் பெரியது" (எரே 30:15)

சிலர் அநியாயமாகத் துன்புறுத்தப்படுவார்கள். "ஒருவன் அநியாயமாய்த் துன்புறும்போது, இறைவனை மனதில் நினைத்துக்கொண்டு பொறுமையோடு ஏற்றுக்கொள்வானானால் அது அவருக்குகந்ததாகும்" (1இரா 2:9)

நற்செய்தியின் வளர்ச்சிக்காகத் துன்பங்களை ஏற்கவேண்டும். (பிலிப்பி 1:12) சில துன்பங்கள் இறைவனின் சித்தமாக உள்ளன. (புனித மாற்கு 14:36) துன்பங்கள் எல்லாம் நன்மைக்கே. உரோம 8:28ஆ துன்பங்களை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஆறுதல்கிடைக்கிறது. (புனித மத்தேயு 11:28), (புனித அருளப்பர் 8:1-11). சோதனைகளின் மத்தியில் துன்பத்தை விட்டுவிடக்கூடாது. (யாகப்பர் 5:11), புனித மத்தேயு 24:12-13) இயேசுநாதர் துன்பங்களை ஏற்றார். (பிலிப்பி 2:8), (1இராயப்பர் 2:21)

எமது வாழ்வில் துன்பப்படுவதால் சோர்ந்து விட்டோமா? இது கடவுளுக்குத் தெரியும். இதற்கு அவர் இடங்கொடுத்துள்ளார். இதை நன்மையாக மாற்றுவார். அவரது நேரம் வரும்வரை காத்திருப்பேன். அதுவரை இறைவனுக்கு நன்றி கூறுவேன்.

*செபம்:*

அன்பான பிதாவே! எனது பாவங்களாலும், மற்றவர்களது பாவங்களாலும் துன்பப்படுகிறேன். உம்மை வெளிப்படுத்த துன்பத்தை அனுபவித்தால் அதைத்தாங்கும் சக்தியைத் தாரும். துன்பத்தினூடாக என்னை அழைத்துச் செல்கிறாய் என்பதை நினைத்து ஆறுதல் அடைய வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 41. இறைவனைப் புகழ்வோம்.

**"எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள். இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள்"** (1தெசலோ 5:16-18)

இஸ்ராயேல் மக்கள் இறைவனைப் புகழ்ந்தார்கள். எல்லா வேளையிலும் இறைவனைப் புகழ்ந்தார்கள். புகழ்ச்சி இறைவனின் சிங்காசனமாகியது. புகழ்ச்சியின் மத்தியில் இறைவன் வாசம் செய்தார். வெய்யிலிலும் புகழ்ந்தார்கள், மழையிலும் புகழ்ந்தார்கள். எல்லா நிகழ்ச்சியிலும் இறைவனைப் புகழ்ந்தார்கள். புகழ்ச்சியால் இறைவனது வல்லமையைப் பெற்றார்கள்.

இறைவனைப் புகழும்போது இறைஅமைதி எமது மனதில் வருகிறது. (பிலிப்பி 4:7) புகழ்பவர்களின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசிக்கும். (பழமொ 15:13) அதேபோன்று இறைவனைப் புகழும்பொழுது எமது மனதுக்குத் திடன் கிடைக்கிறது. (அப். பணி 28:15) எமக்கு விடுதலை கிடைக்கிறது. (அப். பணி 16:25)

எமக்குத் துன்பம் வரும்போதெல்லாம் புகழவேண்டும். (அப். பணி 16:25) **"எதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால் எல்லாத் தேவைகளிலும் நன்றியோடு கூடிய ஜெபத்திலும் மன்றாட்டிலும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்படையுங்கள்"** (பிலிப்பி 4:6)

துன்ப வேளையில் இறைவனைப் புகழாது இருந்தால் நாம் இருளில் விழுந்து விடுவோம். **"அவர்கள் கடவுளை அறிந்திருந்தும், கடவுளுக்குரிய மகிமையை அவருக்கு அளிக்கவுமில்லை, நன்றி செலுத்தவுமில்லை. மாறாக, தங்கள் வீணான சிந்தனைகளில் அறிவிழந்தனர். அவர்களுடைய உணர்வில்லா உள்ளம் இருண்டு போயிற்று"** (உரோம 1:21-22)

இறைவனை எப்படிப் புகழ்வது? ஆண்டவரை வாழ்த்தி அவர்புகழ் பாட வேண்டும். (சீராக் 43:30-37) பெரியதொரு கூட்டத்தின் ஆர்ப்பரிப்பபைப் போன்றும், பெரும் வெள்ளத்தின் இரைச்சல் போலும் தொனித்த பேரொலியோடு இறைவனைப் புகழவேண்டும். (திரு. வெளி 19:6) தாவீது அரசன் நடனமாடி இறைவனைப் புகழ்ந்தான். (2சாமுவேல் 6:21) பாடல்கள், மூலமாகவும் இசைக்கருவிகளின் உதவியோடும் இறைவனைப் புகழவேண்டும்.

*செபம்:*

அன்பான பிதாவே! உம்மைப் புகழ்வது தகுதியும், நீதியும், மீட்புக்குரிய செயலுமாகும். நீர் வல்லவர். நல்லவர் வாக்கு மாறாதவர். உமது அன்பை நான் புகழ்கிறேன். உமது நல்ல குணங்களை நான் புகழ்கிறேன். வார்த்தையாலும், எனது வாழ்வாலும் உம்மைப்புகழ்கிறேன். என்மனதில் ஒளியைத்தாரும். விடுதலை தாரும். அமைதி தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 42. சோம்பல்

சோம்பல் தலையாய பாவங்களில் ஒன்று என்பர். சோம்பலாக இருப்பவர்களின் உள்ளம் சாத்தான் வாசம் செய்யும் இல்லமாக மாறிவிடும். **"உங்களுள் சிலர் எவ்வேலையும் செய்யாமல் அங்கும் இங்கும் சோம்பித்திரிந்து பிறர்வேலையில் தலையிடுவதாகக் கேபள்விப்படுகிறோம்..."** (2தெசலோ 3:5-12)

தன்வேலையில் சோம்பலும் அசட்டையுமாய் இருக்கிறவன் தன் வேலையைச் கெடுக்கிறவனுடைய சகோதரனாம்" (பழமொழி 18:9) வழியில் ஆண் சிங்கமும் பாதைகளில் பெண் சிங்கமும் இருக்கின்றன என்பான் சோம்பேறி. கதவு தன் முளையாணியில் சுழல்வது எப்படியோ, அப்படியாம் சோம்பேறியும் தன் கட்டிலிலே. சோம்பேறி கிண்ணத்தில் தன்கையை வைப்பான் (ஆனால்) தன்வாய் வரையிலும் அதைத்தூக்கவும் தொல்லைப்படுவான். நியாயங்களைப் பேசுகிற ஏழு ஆடவரைக் காட்டிலும் சோம்பேறி தனக்குத்தானே அதிக ஞானியாத்தோன்றுகிறான்" (பழமொழி 26:13-16)

நாம் எப்பொழுதும் நாளை செய்வோம் என எல்லாவற்றையும் பின்போடுகிறோம். இதனால் எமது சோம்பல் வளர்கிறது. அன்றே அதைச் செய்து முடிக்க எமது மனதில் உறுதிதேவை. **"ஏற்றகாலத்தில் உனக்குச் செவி மடுத்தேன். மீட்பின் நாளில் உனக்குத் துணை நின்றேன். இதோ அந்த ஏற்புடைய காலம் இதுவே, இதோ! அந்த மீட்பின் நாள் இதுவே"** (2 கொரி 6:2)

எமது வாழ்வில் எப்படி வாழ்கிறோம். சோம்பல் என்னும் பாவம் வாட்டுகிறதா? எதையும் பின்போட்டுக்கொண்டே காலத்தைக் கழிக்கிறோமா? நாம் சிறுவயதில் தலையாய பாவங்கள் ஏழு எனப்படித்தோம். ஆங்காரம், கோபம், மோகம், லோபம், காய்மகாரம், போசனப்பிரியம், சோம்பல் ஆகியவையே. இவைகளுக்கு எதிரான புண்ணியங்கள் ஏழு தாழ்மை, பொறுமை, கற்பு, ஈகை, பிறர்சினேகம், மட்டசனம், சுறுசுறுப்பு என்பவையே.

இவை எமது மனங்களில் இருந்தாலும் அதன்படி நடக்க மனம் இடந்தரவில்லை.

*செபம்:*

அன்பான பிதாவே! எனது வாழ்வில் சோம்பலை எடுத்துவிடும். சுறுசுறுப்புள்ள மகனாக, மகளாக என்னை மாற்றும். உமது இராட்சியத்தைக் கட்ட வல்லமைதாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 43. எதிர்பார்ப்பும் மகிழ்ச்சியும்

நாம் நம்பிக்கையில்லாத கனவுலகில் பெரும்பாலும் சஞ்சரிக்கிறோம். எனது மகிழ்ச்சி வெளிப்பொருட்களில் அல்லது மற்றவர்களின் மூலம்தான் ஏற்படுகிறது என எண்ணுகிறோம். இதனால் ஏமாற்றமடையும்போது விரக்தியடைகிறோம்.

பலவிதமான கற்பனைகளோடு விவாகம் செய்கிறோம். எல்லாக் கற்பனையும் சுக்குநூறாகும்போது மனவிரக்தியில் விவாகரத்துச் செய்கிறோம். எதையாவது எதிர்பார்க்கிறோம். அது கிடைக்கவில்லையேல் கலக்கத்தில் ஆழ்கிறோம். இதனால் மனச்சோர்வு அடைகிறோம். இதனை மறைக்க போதையைப் பாவித்து அல்லது உண்டு குடித்து, உடுத்து மகிழ்ச்சியாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள முயலுகிறோம்.

சிலர் விளம்பரங்கள்மூலம் இதை வாங்கிப் பாவியுங்கள். எங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் என்று எம்மை ஏமாற்றுகின்றனர். நாமும் அதற்கு அகப்பட்டு ஏமாறுகிறோம்.

**நாம் சிறுவயதாயிருக்கும்போது எமது பெற்றோர் பெரியோர் எமது மனஞாபக அறைகளில் பதித்துவைத்த மனப்பதிவுகள் நாம் தூங்கும்போது கூட நாடாக்களாக ஓடிக்கொண்டிருக்கின்றன. என்னை மகிழ்ச்சிப்படுத்துவது எது? என்பதைத் தேடிப் பார்க்கும்போது இன்னுமொன்று எமது மனத்திரையில் பதிந்துள்ளது தெரிகிறது. எமது பெற்றோர் நாம் சிறுவராக இருந்தபோது பணத்திற்காகக் கஷ்டப்படுவதைப் பார்த்திருக்கிறோம். அதனால் பணம் எமது மகிழ்ச்சிக்கு அவசியம் என முடிவு செய்துள்ளோம். பெற்றோரின் வார்த்தைகள், உடல் அசைவுகள் பாவனையில் பிறரிடம் அவர்கள் சார்ந்திருப்பதைக் கண்டோம். அதனால் மற்றவர்கள் எம்மை மகிழ்விக்கமுடியும்' என எண்ணுகிறோம்.**

மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தும், போட்டியுடன் வாழ்ந்தும் காட்டியதால் அதன்மூலம் எமது மகிழ்ச்சி வருகிறது என எண்ணுகிறோம்.

**"ஆண்டவரில் உன் இன்பத்தைத் தேடு அப்போது உன் நெஞ்சம் நாடுவதை அவர் உனக்குத்தருவார்"** (சங் 36:4)

**மகிழ்ச்சியாயிருக்க நான் என்னை இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனது தேவைகளை அறிந்து நிறைவு செய்யும் திறமை பெறவேண்டும். தன்னுறுதி எமக்குத்தேவை. சுயமாகத்தீர்மானம் எடுக்கப் பழகவேண்டும். யதார்த்த உலகோடு நல்ல தொடர்புகொண்டிருக்க வேண்டும்.**

*செபம்:*

அன்பான பிதாவே! நான் எனக்கு வெளியில் மகிழ்ச்சியைத் தேடாது எனக்குள் மகிழ்ச்சியைத்தேட, எனக்குள் இருக்கும் உம்மில் மகிழ்ச்சியைத் தேட வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 44. என்னை நான் ஏற்றுக்கொள்கிறேனா?

**ஒரு சுயநலவாதி நிறைவற்றவனாய் தன்னை உணர்கிறான். அந்த வேதனையான வெறுமையை தற்பெருமை பாராட்டியோ, அல்லது போட்டியிடுதல் மூலமோ, அடுத்தவர் தோல்வியில் மகிழ்ந்தோ தனது குறையை நிரப்ப முனைகிறான்.**

**ஆனால் தன்னை ஏற்றுக்கொள்பவன் அமைதி அடைகிறான். தாழ்வு மனப்பான்மை உள்ளவன் தன்னை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறான்.**

எமது உடல் விமர்சனத்துக்கும், ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் அடிக்கடி உள்ளாக்கப்படுகிறது. உடல் தோற்றம் சுயமதிப்புக்குக் காரணமாகிறது. சில வேளைகளில் அழகானவர்கள் கூட தான் அழகில்லை என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். சில நோய்கள் வந்து சுயஏற்பைத் தடுக்கிறது.

எமது அறிவுத்திறனை நான் ஏற்றுக் கொள்கிறேனா? திருப்திப்படுகிறேனா? என்னைவிட படித்தவர்களைக் கணும்போது நான் திண்டாடுகிறேனா?

அதேபோன்று எனது தவறுகளை ஏற்றுக்கொள்கிறேனா? எமது தவறுகளில் இருந்து பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்ல எனது உணர்ச்சிகளை நான் ஏற்றுக்கொள்கிறேனா? என ஆராய வேண்டும். ஒருசமயத்தில் மகிழ்ச்சியாகவும், மறுசமயத்தில் வருத்தமாகவும் இருக்கிறோம். உணர்ச்சிகளைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோமோ, அவ்வாறே அவற்றைக் கையாளுகிறோம். சுயவிமரிசனம் கண்டனத்துக்கு ஆளாகாமல் பயம், வருத்தம், கோபம், பொறாமை, வன்மம், சுயதிருப்தி, தன்னிரக்கம் இவற்றை யெல்லாம் உணரமுடிகிறதா?

மேலும் எனது ஆளுமையை நான் ஏற்றுக்கொள்கிறேனா? நாம் எல்லோருமே தனித்தன்மை கொண்டவர்கள். மற்றவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள். எனக்குத் தெரிந்த காலத்திலிருந்து நான் நானாக இருப்பதில் மகிழ்ச்சியாக இருக்கிறேனா? எனது அடிப்படை ஆளுமைவகை என்னை நான் விரும்பக்கூடியதாகத் தெரிகிறதா? அல்லது நான் வருந்தக் கூடியதாகத் தெரிகிறதா?

நாம் தூய ஆவியின் ஆலயங்கள். கிறிஸ்து எனக்குள் குடிகொண்டுள்ளார். (1கொரி 6:19:20), கொலோசி 1:27)

இதை மனதில் கொண்டு நான் இருக்கும் நிலையில் என்னை ஏற்றுக் கொள்ளப் போகிறேன்.

*செபம்:*

அன்பான பிதாவே! உம்மை முதலில் அன்பு செய்யவும் என்னை இருக்கும் நிலையில் ஏற்றுக்கொண்டு அன்பு செய்யவும், மற்றவர்களை அன்பு செய்யவும் வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 45. எனது வாழ்வின் முழுப்பொறுப்பையும் நானேஏற்கவேண்டும்.

நம்மில் பலர் குற்றம் சாட்டுபவர்களாகவே வாழ்கின்றோம். **"நீ தான் இதற்குக் காரணம் என்று மற்றவர்களைச் சாட்டுகிறோம்"**

**"கிறிஸ்துவினுடைய முழுப்பருவத்தின் அளவை அடைந்து முதிர்ச்சி பெற்ற மனிதனாகுவோம்"** (எபேசி 4:13)

நாம் முழுச்சுதந்திரம் உடையவர்கள் அல்ல என்பதை எமது அனுபவங்களில் இருந்து அறிகிறோம். சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமலும், இருக்க நினைப்பதுபோல் இருக்கமுடியாமலும் உள்ளன. **"நான் நல்லதைச் செய்ய ஆசைப்படுகிறேன். ஆனால் செய்யமுடிய வில்லை. விரும்பாத தீமையையே செய்கிறேன். எனக்குள் இன்னொரு சட்டம் போரிடுகிறது"** என்ற புனித சின்னப்பரின் அனுபவம் எம்மிலு முண்டு.

நாம் தீர்மானம் எடுக்கும்பொழுது முதிர்ச்சி நிலையில் தீர்மானம் எடுக்க வேண்டும். அதேபோன்று எமது உணர்ச்சிகளுக்கு நாமே பொறுப்பு ஏற்கவேண்டும். எமது உணர்ச்சிகள் எம்மில் எழும்போது நாம் பொறுப்பான பெரியவர்கள் என்ற வகையில் அவற்றை முழுமையாகவும் சுதந்திமாகவும் அனுபவித்து, அது ஆக்கபூர்வமாகவும் முதிர்ச்சியான முறையிலும் எப்படி வெளிப்படுத்தலாம் என்றும் நாம் முடிவு செய்யலாம். பின்பு ஆறுதலாக இருந்து நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன் என ஆராய்ந்து அறியலாம்.

**"நீதான் என்னைப் பசாசாக்கினாய். எனது கோபத்துக்கு நீ தான் பொறுப்பு"** என மற்றவர்கள் மீது பழிசுமத்துகிறோம். ஆனால் உண்மை அதுவல்ல. எனக்குள்ளே அடக்கிவைக்கப்பட்டிருந்த உணர்வுகள் இந்த நிகழ்ச்சியில் வெளிவந்தன. இதுவே உண்மை. மற்றவர் அப்படிச் செயறபட்டால் நான் ஏன் கோபப்பட வேண்டும்?

எமது அன்றாட வாழ்வில் சுய அறிவு குறைந்தவர்களாக இருந்தால் எதற்கும் மற்றவர்களையே குறைகூறிக்கொண்டிருப்போம். முதிர்ச்சிய டைந்த ஒருவரானால் அதற்கான பொறுப்பைத் தானே எடுப்பார்.

*செபம்:*

அன்பான பிதாவே! எனது உணர்வுகளை அடக்கியாண்டு நிர்வகிக்கவும், என்னை நான் அறிந்து முதிர்ச்சியுள்ள ஒருவனாக, ஒருத்தியாக வாழவும் வரந்தாரும். எனது வாழ்வின் பொறுப்பை மற்றவர்களில் சுமத்திக்குறை கூறாது நானே எடுக்கும் முதிர்ச்சி பெற்ற மனிதனாக என்னை ஆக்கியருளும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 46. ஒற்றுமை

**ஒற்றுமை எமக்குத்தேவை. ஒற்றுமை சக்தியை வளர்க்கிறது. ஒற்றுமையின்மை சக்தியை அழிக்கிறது, சமாதானம், சந்தோசத்தைக் குலைக்கிறது. குடும்பத்தில் ஒருவர் ஒருவரோடு அனுசரித்துப்போகும்போதுதான் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் கூடுகிறது.**

குடும்பத்தில் கணவன் மனைவி எதிர்எதிரான நிலைகளை இருவரும் மேற்கொள்கின்றபோது நெருக்கடிகள் தோன்றுகின்றன. அதை வளரவிட்டால் பெரிய நெருக்கடி தோன்றலாம். பிரச்சினைக்கு யார் காரணம் என்ற விவாதம் எழலாம். இது மற்றவரைத்தவறாகப் புரிந்து சண்டையில் முடியக்கூடும். இது மேலும் பிளவை ஏற்படுத்தும்.

பெரும்பாலும் நெருக்கடியான நிலையில் எமது அறிவு வேலை செய்வது குறைவு. எமது உணர்வுகளே அதிகம் வேலை செய்கின்றன. உணர்ச்சிகளின் பாதிப்பால் எமது சிந்தனை மழுங்கிப்போய் விடுகிறது. கோபம் அதிகரிக்கும்போது இருவருமே தமது கருத்தை உறுதிப்படுத்து வதில், நியாயப் படுத்துவதில் முந்திக்கொள்வர். தாம் நினைத்ததைச் சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி வருகிறது. மேலேயுள்ள நிலைகளைத் தவிர்த்துக்கொள்வது முக்கியம். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அமைதியான நிலையில் சிந்திக்கப்பழகவேண்டும்.

பிரச்சினைகள் எல்லைமீறும்போது எமது வாழ்வில் நெருக்கடியான நிலை தோன்றுகின்றது. இதனால் மனஇறுக்கம் ஏற்படுகிறது. இதனால் உணர்ச்சிக் கொந்தளிப்பு ஏற்பட்டு ஒருவரின் கருத்தை மற்றவர் புரிந்துகொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் அவசரபட்டு முடிவு எடுக்கத்தோன்றுகிறது. இதனால் பதற்றமும் கவலையும் ஏற்படுகிறது. ஒருவரிடம் மற்றவருக்கு அவநம்பிக்கை சந்தேகம் ஏற்படத்தொடங்குகிறது. இருவரும் சேர்ந்து நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பதிலாக, நெருக்கடி முற்றுவதற்கு இருவருமே காரணமாகி விடுகிறார்கள்.

எந்த இருவரும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. தனித்தன்மை கொண்டவர்களாக இருக்கிறோம். இந்த வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமை காண்பதே முக்கியம். கருத்து வேறுபாடுகள் ஏற்படும்போது தமது கருத்தில் பிடிவாதமாக இருக்காது. ஒருவர் கருத்தின் சாதக பாதகங்களை இருவரும் மனம்விட்டுப் பேசி சாதகபாதகங்களை ஆராய வேண்டும். ஒருவர் கடுமையாகப் பேசினால் மற்றவர் சாந்தப்படுத்தமுயல வேண்டும்.

**முடிவெடுக்கும்போது வன்முறையைக்கையாண்டும் முடிவெடுக்கலாம். அல்லது ஏமாற்றிக் காரியத்தைச் சாதித்துக்கொள்ளலாம். அல்லது சாதுரியத்தால் நோக்கத்தை நிறைவேற்றலாம். இவை எல்லாவற்றையும் விட கலந்து பேசி முடிவுக்குவருவதே சிறந்தவழியாகும். மன்னித்து மறத்தல் மிகமுக்கியமாகும். எபேசி 4:17-32.**

*செபம்:*

**அன்பான பிதாவே! எல்லாவகையான தீயமனதையும் விட்டு ஒற்றுமையாக வாழ வரந்தாரும். திருத்துவ ஒற்றுமைபோன்று எனது வாழ்விலும் குடும்பத்தில் ஒற்றுமையாக வாழ வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.**

# 47. இறை அனுபவம்

எமது வாழ்வில் ஏற்படுகின்ற பல நிகழ்ச்சிகள் எமக்குப் பலவகையான அனுபவங்களைத் தருகின்றன. சில அனுபவங்கள் எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. சில அனுபவங்கள் எமக்குக் கவலையைத்தருகின்றன. இறைவனை அனுபவிக்கும் அனுபவம் இறைவனின் கொடையே.

இறைவனைப் பார்த்து "எனக்கு விரைவாக அனுபவத்தைத் தா" என்று இறைவனிடம் கேட்கமுடியாது. ஏனெனில் யார் யாருக்கு எந்த வயதில் தன் அனுபவத்தைத் தரவேண்டும் என்று இறைவன் விரும்புகிறார் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த விடயமாகும். இந்த அனுபவத்துக்காகக் காத்திருப்பதே நாம் செய்ய வேண்டியதாகும்.

**சிலர் தங்களுக்கு நடந்த இறைஅனுபவத்தை விளக்குகிறார்கள். இது உண்மைதானா என்பதை அறிவது எப்படி? அவர்களது வாழ்வில் மாற்றம் நிகழ்ந்துள்ளதா என்பதைக் கொண்டே இனங்காணமுடியும்.**

**"அமைதியுடனிருந்து நான் கடவுள் என்று உணர்ந்து கொள்ளுங்கள்"** (சங்கீ 45:10)

எனது அனுபவத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இது சரியா என்ற சந்தேகம் எனக்கு ஆரம்பத்தில் இருந்தது. என்னைப் பிரபல்யப்படுத்த இதைச்செய்கிறேனா? என்ற கேள்விக்குறியும் எழுந்தது. ஆனால் எனது அனுபவங்களை வாசித்து தாங்களும் அவ்வாறு வாழ ஆசைப்பட்டதாகவும் தமது வாழ்வு மாறியதாகவும் எனக்கு எழுதிய கடிதங்கள் எனக்குத் தென்பைத்தந்தன.

இறைவனின் அன்பில் அனுபவத்துக்குவர நாம் ஆசைப்பட வேண்டும். அவர் தம்மை வெளிப்படுத்தினால் ஒழிய நாம் அவரை அறியமுடியாது. இதற்கு விசுவாசக்கொடைதேவை.

நாம் ஒவ்வொருநாளும் செபிக்கவேண்டும். இறை அன்பைச் சுவைக்க ஆசைப்படவேண்டும். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் இறை அன்பை இறைவன் தரும் விடுதலையை, வழிகாட்டுதலை அனுபவிக்க ஆசைப்படவேண்டும். **"நான்நடக்க வேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம்வார்த்தை. செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே"** (சங் 118:105)

*செபம்:*

அன்பான பிதாவே! நான்செல்லவேண்டிய பாதையை எனக்குக் காட்டியருளும். என் சுமைகளைத்தாங்கியருளும். உமது அன்பை அனுபவிக்க வரந்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமேன்.

# 48. கடவுள் நம் சுமைகளைத் தாங்கிக்கொள்கிறார்

**"நம் ஆண்டவராகிய கடவுள் நம் சுமைகளைத்தாங்கிக் கொள்கிறார்' (சங் 67:19) 'நம் அனைவருடைய அக்கிரமங்களையும் ஆண்டவர் அவர் மேல் சுமத்தினார். அவர் கொடுமையாய் நடத்தப்பட்டார், தாழ்மையாய் அதைத்தாங்கிக் கொண்டார்"** (இசையாஸ் 53:7)

**"சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே. எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள்மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும். ஆம், என் நுகம் இனிது, என் சுமை எளிது"** (புனித மத்தேயு 11:28-30)

எமது வாழ்வில் சொல்லமுடியாத அளவு வேதனைகளைச் சுமக்கிறோம் சில வேளைகளில் சுமக்கமுடியாது களைத்து விடுகிறோம். எமக்கு ஆறுதல் தரவல்லவர் இறைவன். அவரிடம் மனந்திறந்து எமது குறைகளைச் சொல்வோம் **"ஏனெனில் அவர் அருளும் இரக்கமுமுள்ளவர், நீடிய பொறுமையுள்ளவர், நிலையன அன்புள்ளவர், செய்யக்கருதிய தீமையைக் குறித்து மனமாறுகிறவர்"** யோவேல் 2:13)

**"தாயானவள் தன் மகவைச் சீராட்டுவது போல நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம்"** (இசையாஸ் 66:13)

மேற்கூறப்பட்ட இறைவார்த்தைகளை எமது மனதில் பதிப்போம். அடிக்கடி தெரியும் இடத்தில் எழுதிவைப்போம். அதை வாசிப்போம். மனம் குழம்பிய நிலையில் மீண்டும் இவற்றை ஞாபகப்படுத்தி வாய்விட்டுச் செபிப்போம். இறைவனைப் புகழ்வோம்.

**"ஆண்டவருக்குள் என்றும் அகமகிழுங்கள், மீண்டும் கூறுகிறேன்: அகமகிழுங்கள். கனிந்த உங்கள் உள்ளம் அனைவர் முன்னும் விளங்கட்டும். ஆண்டவர் அண்மையில் உள்ளார். எதைப்பற்றியும் கவலைப்படவேண்டாம். ஆனால், எல்லாத்தேவைகளிலும் நன்றியோடு கூடிய செபத்திலும் மன்றாட்டிலும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களை ஒப்படையுங்கள். அப்பொழுது அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் உள்ளத்துக்கும் மனதுக்கும் அரணாயிருக்கும்"** (பிலிப்பி 4:4-7)

*செபம்:*

**அன்பான பிதாவே, . எனது சுமைகளை உம்மிடம் இறக்கிவைக்க ஆசைப்படுகிறேன். எனது குறைகளை உம்மிடம் மனந்திறந்து கூறுகிறேன். எனக்கு ஆறுதல் தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.**

# 49. போதுமென்ற மனம்

**"எந்நிலையிலும் போதுமென்ற மனத்தோடு வாழக்கற்றுக்கொண்டேன். வறுமையிலும் வாழத்தெரியும், வளமையிலும் வாழத்தெரியும். வயிறார உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, நிறைவுற்றுவாழவோ, குறைவுற்றுத் தாழவோ எதற்கும் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு"** (பிலிப்பி 4:11-13)

இன்று நாம் வாழும் சூழலில் பெரியமாற்றம் ஏற்பட்டுள்ளது. 21ம் நூற்றாண்டில் காலடியெடுத்துவைக்கும் இக்காலப்பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். விஞ்ஞான மாற்றம் பெருமளவில் ஏற்பட்டுள்ளது. எதிலும் போட்டியுடனே வாழ்கிறோம். பணமே முக்கியமானது என்ற நிலை நாளுக்கு நாள் மாறிவருகிறது. ஆடம்பரமான வாழ்வு எங்கும் பரவிவருகிறது. இப்படி வாழவில்லையேல் எமக்கு மதிப்பில்லை என்ற நிலை உருவாகிவருகிறது. மக்கள் எளிமைவாழ்வே முக்கியம், அவசியமானதைமட்டும் பாவிப்போம் என்ற நிலை குறைந்து வருகிறது. குடும்பங்களில் தனிக்குடும்பமுறையே பெருகிவருகிறது. அதிகமான குடும்பங்கள் பிரிந்து வருகின்றன. பெற்றோரின் உறவு குலைந்ததால் பிள்ளைகள் பெரிதும் பாதித்துள்ளனர். இதனால் மனதில் உள்ள வெறுமையை மறைக்க ஆடம்பரத்தையும் போதை, அலங்காரம், காமம் போன்றவற்றில் அதிகநாட்டம் கொள்கின்றனர்.

எதிலும் போதுமென்ற மனத்தோடு வாழப்பழகவேண்டும். அவசியமானதை மட்டும் பாவிக்கப்பழகவேண்டும். அப்போது வரவுக்குத் தக்க செலவு செய்யப்பழகிவிடுவோம். வீண் போட்டியைத்தவிர்த்து அமைதியாகவாழப் பழகுவோம்.

சூசையப்பர், மரியாளுடைய வாழ்வில் அவர்கள் இறைபக்தியுள்ள அன்புள்ள குடும்பமாக வாழ்ந்தனர். இறைவனது விருப்பப்படி வாழ்ந்தனர். இறைவனது விருப்பப்படி வாழ மக்களையும் பழக்கினர்.

எமது வாழ்விலும் பிதாவை வெளிப்படுத்த ஆசைப்படுவோம். எமது வாழ்க்கைமுறையில் இறைவன் வெளிப்படவேண்டும். அவசியமானதை மட்டும் பாவிக்கவேண்டும். மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக வாழப்பழக வேண்டும். கணவன் மனைவி இருவரும் ஒற்றுமையாக வாழவேண்டும். 21ம் நூற்றாண்டில் பல சவால்கள் வர இருக்கின்றன. அதற்கு முகங்கொடுக்கும் விதத்தில் எமது பிள்ளைகளைப் பழக்கவேண்டும்.

*செபம்:*

அன்பா பிதாவே! தூய ஆவியை என்மேல்பொழிந்தருளும். உமக்குச் சாட்சியாக வாழ, உம்மை வெளிப்படுத்த எனக்கு வல்லமை தாரும். நற்செய்தியைப் போதித்து எனது அனுபவங்கள் மூலம் மற்றவர்களது விசுவாசத்தை வளர்க்க வரந்தாரும் இறையரசைக் கட்ட வல்லமைதாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 50. அழைப்பு

*"என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப்பிடிப்போராக்குவேன"* (புனித மத்தேயு 4:19)

பொதுவாக எம் எல்லோருக்கும் இரு அழைத்தலுண்டு. ஞானஸ்நானம் பெற்ற நாம் முதலில் கிறிஸ்துவை எமது மீட்பராகவும், ஆண்டவராகவும் முழுமனதோடு ஏற்க வேண்டும். இதுவே எம்எல்லோருக்கும் முதலாவது அழைப்பு. இது எல்லோருக்கும் பொதுவானது. கிறிஸ்துவை மீட்பராக்காது நாம் வெவ்வேறு நபரையும், வெவ்வேறுபொருட்களையும் மீட்பராக்குகிறோம். சிலவேளைகளில் சாஸ்திரம் பார்க்கிறோம். நூல்கட்டுகிறோம். முழுமனதோடு ஆண்டவரை எமது மீட்பராக்க வேண்டும்.

முதலாவது அழைத்தல் ஆழமாகினாலேயே இரண்டாவது அழைத்தல் வெற்றிபெறும். இரண்டாவது அழைத்தல் வித்தியாசமானது. ஒருசிலர் குருவாகவும் ஒருசிலர் துறவியாகவும், சிலருக்குத் திருமணவாழ்வுக்கும் அழைத்தலுண்டு. இவை எல்லாம் சமமானவை. கிறிஸ்துவை எமது மீட்பராகவும் ஆண்டவராகவும் ஆக்காது இரண்டாவது அழைத்தலைப் பாரமெடுத்தோர் வேதனை துன்பங்களில் சோர்ந்த விடுவர். முதலாவது அழைத்தல் உறுதியாகினாலேயே இரண்டாவது அழைத்தல் உறுதியாகின்றது.

*"நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ! நான் உலகமுடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்"* (புனித மத்தேயு 28:19-20)

இதைச் செய்வதற்கு எமக்கு வல்லமை தேவை. நாம் அவருக்குச் சாட்சிகளாக வாழவேண்டும்.

*"பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்போது, அவரது வல்லமையைப் பெற்று ஜெருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்குமே நீங்கள் சாட்சிகளாயிருப்பீர்கள்"* (அப். பணி 1:8)

**பரிசுத்த ஆவியைப் பெறவேண்டும். அவரது வழிநடத்துதல் எமக்குத்தேவை. பரிசுத்த ஆவியைப் பெற்றபின்பு சவுல் பவுலாக மாறினார். (அப். பணி 9:17-18), அப். பணி 8:1-18) நாம் இலஞ்சம் கொடுத்துப் பரிசுத்த ஆவியைப் பெறமுடியாது. (அப்.பணி 8:18-21) பரிசுத்த ஆவியானவர் இறைவனின் பிள்ளைகளாக வாழ எமக்கு உதவுகிறார். (உரோமர் 8:14) பரிசுத்த ஆவியைப் பெற நாம் ஆசைப்படவேண்டும். ஜெபிக்கவேண்டும். எமது பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்கவேண்டும்.**

*செபம்:*

அன்பான பிதாவே! இந்நூலின்மூலம் ஐம்பது நாட்களும் உமது அன்பை அனுபவித்தோம். மேலும் உமது அன்பை அனுபவிக்கவும் உண்மையைத் தெரிந்து கொள்ளவும் வரந்தாரும். எமது குடும்பத்தில், பங்கில், நாட்டில், வெளிநாடுகளில் வாழும் எமது சகோதர சகோதரிகளை ஆசீர்வதியும். எமக்குச் சமாதானத்தைத்தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.